பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 3 செவ்வாய்க்கிழமை (19~11~2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:357

# வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு 'சர்வதேச நிதியம்' நிறுவப்படும்

## நேற்றைய கூட்டத்தின் பின் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கிளிநொச்சி,நவ.19

வடக்கு - கிழக்கு மீள்புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக் கான உதவிகளைக் கையாள சர்வ தேச நிதியம் ஒன்று ஆரம்பிக்கப் படும். நடுநிலையான நாடு அல்லது வேறு நாடுகள் உள்ளடங்கிய அமைப்பு ஒன்றினால் இந்த நிதியம் கையாளப்படும்.

புனர்வாழ்வு உப குழு('சிறன்') இனங்காணும் திட்டங்களுக்கு இந்த நிதியம் நேரடியாக நிதியை வழங் கும்.

- இவ்வாறு தகவல் வெளியிட்டார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் 'சிறன்' கூட்டம் முடிவுற்ற பின்னர் 'உத யனு'க்கு வழங்கிய பேட்டியில் இத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தை மளக் கட்டியெழுப்புவதற்கும் யுத் தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவ தற்கும் வேண்டிய நடவடிக்கை களை மேற்கொள்வது குறித்தே நேற்றைய பேச்சில் முக்கியமாக ஆராயப்பட்டது.

இந்தப் பேச்சுக்களில் இரு தரப்பினரும் திருப்திகரமாக உடன்

(02ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா உப குழுக் கூட்டம் முடிவு எட்டப்படாமலே முடிவு!

கொழும்பு,நவ.19

பாதுகாப்புத்தொடர்பான அரசு - புலிகள் தரப்புகளின் உபகுழுவின் வவுனியா மாவட்டத்துக்கான உப குழுக்கூட்டமும் எந்தவிதமான தீர் மானங்களும் எட்டப்படாத நிலையி லேயே முடிவுற்றுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான வவுனியா மாவட்ட உப குழுக்கூட்டம் நேற்று வவுனியா ஓமந்தை இராணுவ சூனியப்பிரதேசத் தில் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

விடுதலைப் புலிகளின் சார்பில் வவுனியா மன்னார் மாவட்டத் தளபதி கேணல் ஜெயம், கடற்புலிகளின் தள பதிகளில் ஒருவரான லெப்.கேணல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் ஒஸ்லோ கூட்டத்தில்

# உதவி கோரும் மனு நேற்று கிளிநொச்சியில் தயாரிப்பு



கிளிநொச்சியில் நேற்று நடந்த புனரமைப்பு உப குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜப்பானியப் பிரதிநிதிகள். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## அடுத்த கூட்டத் திகதி பற்றியும் உபகுழு தீர்மானம்

கொழும்பு,நவம்பர்19

**வடக்கு-கிழக்கில் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவை களுக்கான உபகுழுவின் (Sub Committee on Immediate Humanitarian and Rehabilitation Needs in the North and East (SIHRN - 'சிறன்') - நேற்று கிளிநொச்சியில் முதல் முதலாக கூடியது. அப்போது எதிர்வரும் 25 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் ஆதரவு கோரிச் சமர்ப்பிக்க இருக்கும் ஆவணத்தைத் தயாரிப்பது பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது.**

கூட்டம், கிளிநொச்சி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பித்து, 7 மணி நேரம் நடைபெற்றது. கூட்டத்துக்கு இலங் கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் நோர்வே அர சின் சார்பில் அனுசரணை வழங்கி னார்.

அரசு தரப்பு குழுவுக்கு சமாதான செயலக பணிப்பாளர் பேர்னாட் குணதிலகவும் விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் தலைமை தாங்கினர். ஜப்பான் அர

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் பிரவேசத்தை ஆட்சேபித்து

# தீவகத்தில் சில இடங்களில் நேற்று வீதி மறிப்புப் போர்!

யாழ்ப்பாணம்,நவ.19

நெடுந்தீவு பிரதேசத்தில் ஈ.பி.டி. பியினர் மீண்டும் நிலைகொள்வதை ஆட்சேபித்து தீவகத்தின் பல இடங் களிலும் நேற்று வீதிமறிப்புப் போராட் டங்கள் இடம்பெற்றன.

பெரும் எண்ணிக்கையானோர் வீதி களில் தடைகளைப் போட்டு போக்கு வரத்தைத் தடுத்தனர்.

தீவகத்தில் பொதுமக்கள் தாக் கப்பட்டதாகப் பரவிய தகவலை அடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

வேலணை வங்களாவடிச் சந்தியில் நேற்று நண்பகல் வீதித் தடைகள் போடப்பட்டன. மரக்குற்றிகளும், பரல் தகரங்களும் போட்டு போக்குவரத்து தடுக்கப்பட்டது. வங்களாவடி சந்தியில் [illegible] களுக்குச் செல்லும் வீதிகளில் போக்கு வரத்து தடைப்பட்டது. வாகனங்கள் இடைவழியில் திரும்பின. சில வேறு பாதைகளூடாக திருப்பப்பட்டன.

புளியங்கூடல் சந்தி, சரவணைச் சந்தி ஆகிய இடங்களிலும் மக்கள் வீதிமறிப்பில் ஈடுபட்டனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்க ஜனாதிபதி மீண்டும்மீண்டும் உறுதி

### கட்சியின் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறானது

கொழும்பு,நவ.19

அரசின் சமாதான நடவடிக்கை களுக்கு ஐந்து தினங்களுக்குள் மூன்றாவது தடவையாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முழு ஒத்து ழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தி ருக்கின்றார்.

சமாதான நடவடிக்கைகளில் தான் பெரிதும் ஈடுபாடு கொண்டிருப்ப தாக ஜனாதிபதி சந்திரிகா வெளி நாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் தெரிவித்தார் என்று வெளிநாட்டுச் செய்திச் சேவையொன்று தெரிவித் திருக்கிறது.

இலங்கைக்கு விஜயம் செய்தி ருக்கும் குரோஷிய ஜனாதிபதி ஸ்டைப் மெசிக்கை கௌரவிக்க சனியன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இரவு விருந்துபசார வைபவத்திலேயே ஜனாதிபதி சமா தான நடவடிக்கைகளுக்கான தனது

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியை வெளியேறும்படி கோருகிறது கண்காணிப்புக்குழு

### புலிகள் வெளியேறினால் வெளியேறுவோம் என்கிறார் டக்ளஸ்

கொழும்பு,நவ.19

நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பி. உறுப் பினர்களை அங்கிருந்து வெளியேற்று மாறு இலங்கை கண்காணிப்புக்குழு ஈ.பி.டி.பியிடம் கோரிக்கை விடுத்தி ருக்கிறது. ஆயினும், இக்கோரிக்கையை ஈ.பி.டி.பி. ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியின் மீள் பிரவேசத்தால் எழுந்துள்ள பதற்ற நிலை காரணமாக, பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் வரை நெடுந்தீவுக்கு மீண்டும் அனுப்பப்பட்டிருக்கும் ஈபிடிபி

(02ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org











நேற்று கிளிநொச்சியில் நடந்த முதலாவது புனரமைப்பு உப குழுவின் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. அரச, புலிகள், நோர்வே ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழுக்கள் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதை முறையே முதல் மூன்று படங்களிலும் பேச்சுக்களின் இடையில் அதில் கலந்து கொண்டவர்கள் மண்டபத்துக்கு வெளியே கூடிப் பேசுவதையும் அரச பிரதிநிதிகள் வந்த ஹெலி ஒன்று கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் தரையிறங்குவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்: தேவராஜன்)*



## அமெரிக்க பிரதி அமைச்சர் நாளை வருகிறார்

அமெரிக்க பிரதி வர்த்தக அமைச்சர் ஜோன் ஹன்ஸ்மன் நாளை இலங்கை வருகிறார். இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கையெழுத்திடப்படவிருக்கும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றிய பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து பேச்சு நடத்தவே அவர் இலங்கை வருகிறார்.

இலங்கையுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை செய்வது குறித்து கடந்த ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்க வர்த்தக அமைச்சர் ரொபர்ட் கொலிசிக்கிற்கும் இலங்கை பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற்றன.

இலங்கை வரும் அமெரிக்க பிரதியமைச்சர் ஹன்ஸ்மன் வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடனும் அதிகாரிகளுடனும் பேச்சு நடத்துவார். (ஐ)

## ஈ.பி.டி.பியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களை விலக்கிக்கொள்ளுமாறு கண்காணிப்புக் குழுவினர் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இக்கோரிக்கைக்கு பதிலளித்திருக்கும் டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவிலிருந்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் வெளியேற்றப்படுவார்களேயானால் தனது கட்சி உறுப்பினர்களும் வெளியேற்றப்படுவார்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

வடக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட எந்தவொரு நபருக்கும் உரிமையுண்டு என்பதும், யாராவது அதற்குத் தடையாக இருப்பார்களேயானால் அது ஜனநாயக விரோதமானதாகும். என்பதும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகத்தின் கருத்தாகும்.

இந்த நிலையில் நெடுந்தீவுக்கு மீண்டும் சென்றிருக்கும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பொலீஸாரினதும் கடற்படையினரதும் பாதுகாப்புக்கு மத்தியில் அங்கு தொடர்ந்து தங்கிருக்கின்றனர் எனத் தெரிகின்றது.(ம)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடு காணும் வகையில் மனந்திறந்து கலந்துரையாடினர். இந்தப் பேச்சுக்கள் பயன் உள்ளது என்பதை மறக்கமுடியாது.

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான உதவியை ஒஸ்லோ மாநாட்டில் அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து கோருவதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டன. இரு தரப்பினரும் இணைந்து உதவி கோரும் விண்ணப்பம் ஒன்றை ஒஸ்லோ மாநாட்டில் முன்வைப்பது என்று முடிவுசெய்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள உப குழுவினால் இனங்காணப்படும் திட்டங்களுக்கான உதவிகளைக் கையாள சர்வதேச நிதியம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்பட்டது. சர்வதேச கண்காணிப்போடும் ஆதரவுடனும் இந்த நிதியத்தை ஆரம்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இந்த நிதியம் தொடர்பாக ஒஸ்லோ மாநாட்டில் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உபகுழு இனங்காணும் திட்டங்களுக்கு இந்த நிதியம் நேரடியாக நிதியை வழங்கும். நடுநிலையான நாடு அல்லது வேறு நாடுகள் உள்ளடங்கிய அமைப்பு ஒன்றினால் இந்த நிதியம் கையாளப்படும். இந்த நிதியத்தில் அரச சார்பிலோ, விடுதலைப் புலிகள் சார்பிலோ பிரதிநிதிகள் எவரும் இடம்பெறமாட்டார்கள்.

ஒஸ்லோவில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திட்டம் முழுமையாக தயாரிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகள் தமது அலகுகள் மூலம் ஆவணம் ஒன்றைத் தயாரித்துள்ளனர். அந்த ஆவணத்துடன் அரசு இனங்கண்டு பிரேரிக்கும் திட்டங்கள் அடங்கிய ஆவணம், சர்வதேச அமைப்புக்களால் இனங்காணப்படும் திட்டங்கள் கொண்ட ஆவணம் ஆகியன உள்ளடக்கப்பட்டு பொதுத் திட்டம் ஒன்று விரைவில் தயாரிக்கப்படும். அத்திட்டமே ஒஸ்லோ மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

புனர்வாழ்வு, அபிவிருத்திக்கான உபகுழுவின் அலுவலகம் கிளிநொச்சியில் அமையவிருக்கின்றது. அந்த அலுவலகத்திற்கான கட்டமைப்புக்கள் குறித்தும் ஆராய்ந்தோம். அந்தக் குழுவின் பணிப்பாளராக விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படும்

(13ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக இப்பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் கடைகள் மூடப்பட்டிருந்தன.

தீவக மக்கள் நலன்காப்பு அமைப்பும் பொது அமைப்புகளும் இந்த வீதி மறிப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தின.

நெடுந்தீவு மக்களின் விருப்பத்திற்கு மாறாக அங்கு எவரும் பலவந்தமாகக் காலூன்றுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தீவக நலன் காப்பகத் தலைவர் த.சத்தியதாசன் தெரிவித்தார்.

இதேவேளை-

மக்களின் எதிர்ப்பை அடுத்து கடற்படை மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புடன் நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் தங்கியிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பொலீஸ் சீருடை அணிந்து ஆயுதங்களுடன் கடற்படை யினரின் டிராக்டர் ஒன்றில் தமது முகாம் அமைந்திருந்த பகுதிக்குச் சென்று அதனைத் திருத்தியமைக்கும் பணியில் நேற்று ஈடுபட்டதாக அங்கிருநது கிடைக்கும் தகவல்கள் தெரிவிப்பதாக புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ.பி.டி.பியினரின் இந்த நடவடிக்கையை மக்கள் ஆக்ரோஷமாக எதிர்த்தனர். கொட்டும் மழைக்கு மத்தியிலும் அவர்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது ஈ.பி.டி.பியினரும் அவர்களுக்குப் பாதுகாப்பாக நின்ற பொலீஸாரும் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இதனால் பேபி, பிரான்ஸிஸ் சேவியர், பாலன் ஆகிய மூன்று அப்பாவிப் பொதுமக்கள் காயமடைந்தனர்.

- இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் தலையிடவேண்டும் என்று நெடுந்தீவு மக்கள் கோரியிருப்பதாக அந்த அமைப்பின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

எமது மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதை அனுமதிக்கமுடியாது என்று தெரிவித்த அவர் இது குறித்துத் தாம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறினார்.

அதனையடுத்து கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்கள் மூவரும் நெடுந்தீவு சென்று மக்களுடன் உரையாடியதாகவும் -

அப்போது ஈ.பி.டி.பியினரின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ஜெகன் இராணுவச் சீருடையில் அங்கு நடமாடியதைத் தாங்கள் அவதானித்ததாகப் பொதுமக்கள் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்ததாகவும் -

ஈ.பி.டி.பியினரை வெளியேறக்கோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை, ஒரு பெண்ணுக்கு ஐந்து பொலீஸார் என்ற ரீதியில் வல்லுறவுக்கு உட்படுத்தப்போவதாக மிரட்டியதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

நெடுந்தீவில் பொதுமக்களை நாமே தூண்டிவிட்டு, ஈ.பி.டி.பியினருக்கு எதிராகச் செயற்பட வைப்பதாக ஒரு கருத்துத் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றது. ஆனால், உண்மை அதுவல்ல என்பது எமது மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். மக்களைத் தூண்டி விடவேண்டும் என்ற [illegible]

(14ஆம் பக்கம் பார்க்க)

## உதவி கோரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி சார்பில் மொரோஹைட் யொஷிகாவ கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டம் நம்பிக்கையூட்டும் விதத்தில் சுமுகமான சூழ்நிலையில் நடந்தது. எதிர்நோக்கும் சவால்களை எல்லாம் சமாளித்து ஆக்கபூர்வமாக செயற்படும் அணுகுமுறையை இரு தரப்பினரும் கடைப்பிடித்தனர்.

'சிறன்' கூட்டங்களை நடத்துவதற்கான வழிமுறைகள் பற்றி இருதரப்பினரும் இணக்கம் கண்டுகொண்டனர்.

'சிறனு'க்கு செயலகம் ஒன்றை அமைப்பது என்றும் ஒரு பணிப்பாளர் மற்றும் பிரதிப்பணிப்பாளர் ஆகியோரை நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. செயலகம் டிசெம்பர் 15ஆம் திகதி செயற்பட தொடங்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

'சிறனி'ன் அடுத்த கூட்டத்தை டிசெம்பர் 15, 16ஆம் திகதிகளிலும் அதற்கு அடுத்த கூட்டத்தை 2003 ஜனவரி 15, 16ஆம் திகதிகளிலும் நடத்துவதென்று இரு தரப்பினரும் இணங்கிக்கொண்டனர்.

இத்தகவல்கள் நேற்றைய கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக உபகுழுவில் இடம்பெறும் முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளிட்ட அரசுதரப்பு பிரதிநிதிகள் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து இரண்டு ஹெலிகளில் வந்துசேர்ந்தனர். காலை 9 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தை ஹெலிகள் வந்தடைந்தன.

[illegible] சமாதானச் செயலகப் பொறுப்பதிகாரி போனாட் குணதிலக, அமைச்சர் மிலிந்த மொறகொடவின் செயலாளர் எம்.டி.டி.பீரிஸ் ஆகியோரும் முஸ்லிம் பிரதிநிதியான வன்னி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான ரிசாத் பதியுதீன் ஆகியோரும் ஜப்பான் அரசின் விசேட பிரதிநிதி ஒட்சுசா, அவரது ஆலோசகர்கள் இருவர், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க், தூதரக அதிகாரி தோமஸ் ஸ்ரேங்லன்ட் ஆகியோர் இறங்கினர். அரச பிரிதிநிதியான எம்.ஐ.எம்.ரபீக் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அவர்களை புலிகளின் அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன், புலிகளின் சமாதானச் செயலகத்தின் செயலர் புலித்தேவன் ஆகியோர் வரவேற்று கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் அரசியல் பிரமுகர் வே.பாலகுமாரன், தமிழர் புனர்வாழ்வுக்கழக சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன் ஆகியோர் குழுக்கூட்டப் பேச்சுக்களில கலந்துகொண்டனர். திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக், மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பார் கௌசல்யன் ஆகியோர் ஆலோசகர்களாகப் பங்குபற்றினர்.

உபகுழுக் கூட்டம் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்தது. முதல் அமர்வு பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது. இரண்டாம் அமர்வு 2 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நடந்தது.

(ம-3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.நாவின் சமாதான தூதராக முன்னாள் உலக குத்துச்சண்டை வீரர் முகமது அலி ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவருக்கு பெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. தலைநகர் காபூலில் உள்ள பெண்கள் பாடசாலை ஒன்றுக்கு முகமது அலி சென்றிருந்த போது அப்பாடசாலை மாணவிகளுடன் அவர் எடுத்துக் கொண்ட படம் இது.

## வடகொரியா அறிவிப்பு!

லண்டன்,நவ.19

தன்னிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக வடகொரியா முதற்றடவையாக அறிவித்துள்ளது. வடகொரிய அரசின் இந்த அறிவிப்பை அந்த நாட்டு தேசிய வானொலி வெளியிட்டது. அமெரிக்காவுக்கும் அதன் நேசநாடுகளுக்கும் இது அபாய அறிவிப்பாகும் என்று கூறப்படுகிறது. (ஒ)

## நெடுமாறனின் பிணை மனு மீது உத்தரவு

சென்னை,நவ.19

பொடாச்சட்டத்தின் கீழ் தமிழகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன் ஆகியோரது பிணை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 2 வாரத்துக்குள் பதிலளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (ஒ)

# தன்னைக் கண்டித்த கணவனின் காதை அறுத்தாள் மனைவி!

## ஈரானில் நடந்த விபரீதம்

தெஹ்ரான்,நவ.19

ஈராக் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருத்தி 'ஏன் தாமதமாக வீட்டுக்கு வந்தாய்? என்று கேட்ட கணவனின் காதைக் கத்தியால் அறுத்து, அவர் கையில் கொடுத்தாள். தெஹ்ரானைச் சேர்ந்த அந்தப் பெண் கைது செய்யப்பட்டாள். அவள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

என் மனைவி ஜூடோ சண்டைப் பயிற்சி பெற்றவள். எனவே அவளுக்கு வெகு சீக்கிரம் கோபம் வந்துவிடும். அவள் விரும்பாத எதையும் என்னைப் பேச அனுமதிக்கமாட்டாள். அவளுக்குப் பிடிக்காத எதையாவது செய்தால என்னை அடித்து உதைப்பாள்.

'சம்பவத்தன்று அவள் இரவு தாமதமாக வந்தாள். ஏன் தாமதமாக வந்தாய் என்று கேட்டேன். உடனே அவள கத்தியை எடுத்து என் காதை அறுத்து கையில் கொடுத்து விட்டாள்' என்று நீதிமன்றத்தில் கணவர் கூறினார்.

அவரது மனைவி கூறுகையில், 'என் விவகாரத்தில் கணவர் தேவை இல்லாமல் மூக்கை நுழைத்தார். அதனால் அவருக்கு பாடம் புகட்டுவதற்காக நான் அவர் காதை அறுத்தேன்' என்று தெரிவித்தார்.

அந்தப் பெண்ணுக்கு பிணை வழங்கிய நீதிமன்றம் மேற்கொண்டு விசாரணை நடத்தும்படி உத்தரவிட்டுள்ளது. (ஒ)

# ஆப்கானின் ஒருபகுதி பாக்.இராணுவம் வசம்

இஸ்லாமாபாத்,நவ.19

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் எல்லையை ஒட்டி உள்ள ஒரு பகுதியை பாகிஸ்தான் இராணுவம் கைப்பற்றிக் கொண்டது.

கோஸ்ட் நகருக்கு அருகே சுமார் 105 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவுள்ள நிலத்தை பாகிஸ்தான் இராணுவம் கைப்பற்றிக்கொண்டது. ஆப்கான் நாட்டுக்குள் முஷ்ரி, கந்தன் ஆகிய இடங்களில் 2 இராணுவ முகாம்களை அது அமைத்துக்கொண்டது. அங்கு பாகிஸ்தான் கொடிகளும் ஏற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தன் எதிர்ப்பை ஆப்கானிஸ்தான் பாகிஸ்தானிடம் தெரிவித்து உள்ளது.

துராந்த் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டை பாகிஸ்தான் மீறிவிட்டதாகவும் ஆப்கானிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஒ)

# ஐ.நா. ஆயுதப்பரிசோதகர்கள் நேற்று பாக்தாத் சென்றனர்

லண்டன்,நவ.19

சுமார் 4ஆண்டுகளுக்குப் பின்னர் ஐ.நா.ஆயுதக் கண்காணிப்பாளர் நேற்று ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு மீண்டும் சென்றனர். ஈராக் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை வைத்துள்ளதா? என்பது குறித்து சோதனை நடத்தும் ஐ.நா. தீர்மானத்துக்கு அமையவே அவர்கள் ஈராக் சென்றுள்ளனர்.



25 பேர் கொண்ட இந்த ஆயுதப் பரிசோதகர்கள் குழுவுக்கு மொகட் எலபரடே தலைமை வகிக்கிறார். இவர் உலக அணுசக்தி நிறுவனத்தின் இயக்குநராவார். இதே நிறுவனத்தைச் சேர்ந்த ஹன்ஸ் பிலிக்ஸ் தலைமைப பரிசோதகராகப் பணியாற்றுவார்.

ஆயுதப்பரிசோதகர்கள் குழு பாக்தாத் விமான நிலையத்தை நேற்று சென்றடைந்ததும், அங்கு செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியது.

இது அமைதிக்கான சிறந்த சந்தர்ப்பம். இதனை ஈராக் நன்கு பயன்படுத்திக்கொள்ளும் என்று நம்புகின்றோம் - என்று அப்போது எல்பரடே தெரிவித்தார். (ஒ)

### காஸா பிராந்தியத்துக்கான

# பலஸ்தீனப் பாதுகாப்புப் படை முகாம் இஸ்ரேலியத் தாக்குதலில் தகர்ப்பு!

லண்டன்,நவ.19

காஸாவில் உள்ள பலஸ்தீனப் பாதுகாப்புப் படையின் பிராந்திய தலைமையகத்தை நேற்றுமுன்தினம் நள்ளிரவு இஸ்ரேலிய இராணுவம் தகர்த்துத் தரைமட்டமாக்கியது. முன்பாக அதற்குள் சோதனை நடத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹெப்ரானில் பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் காஸாப்பகுதியில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோன் தீவிரப்படுத்த உத்தரவிட்டார். இதனையடுத்து ஒவ்வொரு இரவும் பலஸ்தீன நிலைகளை இஸ்ரேலியப் படைகள் தகர்த்து வருகின்றன.


நேற்று முன்தினம் நள்ளிரவுக்கு சற்று முன்பாக 30 இஸ்ரேலிய டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இஸ்ரேலிய இராணுவத்தினர் பலஸ்தீன பாதுகாப்புப் படை முகாமை சுற்றி வளைத்தனர். சுற்று மதில் புல்டோசர்கள் மூலம் தகர்க்கப்பட்டது. பின்னர் முகாம் வளாகத்துக்குள் நுழைந்த டாங்கிகள் தாக்குதல் நடத்தின. அப போது ஹெலிகளில் இருந்தும் ஏவுகணைகள் முகாம் மீது ஏவப்பட்டன.

இத் தாக்குதலில் பலஸ்தீனப் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தி வந்த கட்டடங்கள் எரிந்தன.

இறுதியாக சில மணித்தியாலங்களின் பின்னர் இஸ்ரேலியப் படையினர் அங்கிருந்து வெளியேறினர்.

இத்தாக்குதலின் போது பலஸ்தீனத் தரப்பிலிருந்து சிறிய அளவில எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்ட போதும பாரதூரமான உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்று இரு தரப்புகளும் தெரிவித்தன.

இஸ்ரேலிய சிரேஷ்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் இஸ்ரேல் ஜிங் கூறுகையில், காஸாவில் உள்ள பலஸ்தீனப் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார். (ஒ)



காஸாவில் பலஸ்தீன பாதுகாப்பு தலைமையகம் மீதான தாக்குதலையடுத்து பலஸ்தீன அதிகாரிகள் சேதங்களைப் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

### ஐ.நா. அதிகாரிகளின் கண்களில் மண்தூவ

# மருந்திகள் மற்றும் ஆஸ்பத்திரிகளில் உயிர்கொல்லி ஆயுதங்கள் பதுக்கல்!

## ஈராக்கிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

லண்டன்,நவ.19

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், ஐ.நா. பரிசோதகர்களின் கண்களில் படாமல் பயங்கர ஆயுதங்களை மறைப்பதற்காக, அவற்றை மசூதிகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றுக்கு மாற்றி இருக்கிறார் என்று ஈராக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதிபர் சதாம் இரசாயன, உயிர்க்கொல்லி ஆயுதங்களைத் தயாரித்து பதுக்கி வைத்திருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது.

இந்த ஆயுதங்களைக் கண்டு பிடித்து அழிப்பதற்காக ஐ.நா. ஆயுதப்பரிசோதகர்களை அனுமதிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதை ஈராக்கும் ஏற்றுக் கொண்டு உள்ளது.

இந்த நிலையில் ஈராக்கிய எதிர்க்கட்சியான தேசிய உடன்பாடு கட்சியின் தலைவர் அயாத் அலாவி, அதிபர் சதாம் மீது குற்றஞ்சாட்டி உள்ளார்.

ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களை ஏமாற்றுவதற்காக ஆயுதங்களை பரிசோதனைக் கூடங்கள் மற்றும் ஏவுகணைத் தளங்களில் இருந்து சதாம் அகற்றிவிட்டார். அவை மசூதிகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரி ஆகியவற்றில் பதுக்கி வைக்கப்பட்டு உள்ளன என்று அவர் கூறியிருக்கிறார்.

'ஆயுதங்களை மறைத்து வைக்கும் வேலைகளை சதாமின் நம்பிக்கைக்கு உரிய உதவியாளர் பிரிகேடியர் வாலிட் - அல் - நஸ்ரி ஒருங்கிணைந்து செய்துவருகிறார்' என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் இரசாயன, உயிர்க்கொல்லி ஆயுத பரிசோதனைக் கூடங்கள் - பூமிக்கு அடியில் - பாதாள அறைக்குள் அமைக்கப்பட்டு அங்கு ஆயுதங்கள் உருவாக்கப்படுகின்றன என்று அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்த ஈராக் பொறியியலாளர் அட்னன் அல் ஹைதேரி கூறி இருக்கிறார்.

இரசாயன உயிர்க்கொல்லி ஆயுதங்களை உருவாக்கிய பலவிஞ்ஞானிகளை ஆயுத பரிசோதகர்கள் விசாரிக்காமல் தடுப்பதற்காக போலி கடவுச் சீட்டுக்களில் ஈராக் வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்து உள்ளது என்றும் அயாத் அலாவி குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

கடந்த 2 வாரங்களில் மட்டும் 2 விஞ்ஞானிகள், ஏமன் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். 2 பேர் மத்தியகிழக்கு நாடுகளுக்கும், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விஞ்ஞானியும் அனுப்பப்பட்டு இருக்கிறார் என்றும் அயாத் அலாவி கூறி இருக்கிறார். (ஒ)

# கென்னடியின் கார் 2 கோடிக்கு ஏலம்!

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட ஜோன் எப்.கென்னடியின், கார் 2 கோடியே 2 லட்சம் ரூபாவிற்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

நியூயோர்க் நகரில் நடந்த ஏலத்துக்கு காரை வாங்கியவர் ரெவில்லை ஏலத்துக்கு வராமலேயே முன்கூட்டியே தான் எடுக்க விரும்பும் தொகையை அவர் குறிப்பிட்டு இருந்தார். 1963 ஆம் ஆண்டு அவர் சுட்டுக்கொல்லப் படுவதற்கு முதல்நாள் லிங்கன் கான்டினென்டல் என்ற காரில் கென்னடி பயணம் செய்தார். அந்தக் கார் இப்போது [illegible] உள்ளது. அதன் உட்புறம் எந்த மாற்றமும் செய்யப்படாமல் அப்படியே உள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யேமன் பழங்குடியினரின் பாதுகாப்பில் பின்லேடன்

லண்டன்,நவ.19

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் தன் தந்தையின் நாடான யேமனில் தங்கியுள்ளதாகவும் -

அங்கு பழங்குடி மக்களின் பாதுகாப்பில் அவர் இருப்பதாகவும் - செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம 11ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த விமானத் தாக்குதலைத் தொடர்ந்தே பின்லேடனை அமெரிக்கா தேடி வருகிறது.

அவர் ஆப்கானிஸ்தானில் பதுங்கி இருந்தபோது அவரை அழிப்பதற்காக அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதில் அவர் கொல்லப்பட்டு இருக்கலாம் என்று அமெரிக்கா முதலில் நம்பியது.

பின்னர் அவர் பாகிஸ்தானுக்குத் தப்பி ஓடி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. இப்போது அவர் ஆப்கானில் இருந்து யேமன் நாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

யேமன் நாடு ஆபிரிக்காவில் உளளது. பழங்குடி மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இந்த நாட்டில்தான் பின்லேடனின் தந்தை பிறந்தார். இங்கு இருந்துதான் அவர் சவூதி அரேபியாவில் குடியேறினார்.

இந்த நாட்டில் அரசின் சட்டதிட்டங்களுக்கு அதிக மதிப்புக் கிடையாது. பழங்குடியினரின் நிர்வாகமே நடக்கிறது.

தென்கிழக்கு யேமனில் உள்ள ஹத்ராமாக் என்ற இடத்தில்தான் பின்லேடனின் தந்தை பிறந்தார். அங்குதான் இப்போது பின்லேடன் பதுங்கியிருப்பதாக நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவர் ஆப்கானில் இருந்து புறப்பட்டு, கஞ்சா கடத்தல்காரர்கள் பயன்படுத்தும் வழியாக ஈரான் சென்றார். பிறகு அங்கு இருந்து பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பாலைவனம் வழியாக குவாடார் துறைமுகத்தை அடைந்தார்.

அங்கு இருந்து அரேபியக் கடலைக் கடந்து, ஓமன் நாட்டுக்குச் சென்றார். பிறகு அங்கு இருந்து ஏமன் நாட்டை அடைந்தார்.

அவரது குடும்பத்துக்கு விசுவாசமான பழங்குடி மக்களின் பாதுகாப்பில் அவர் தற்போது உள்ளார்.

இவ்வாறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

யேமன் நாட்டில் அல்கெய்டா தீவிரவாதிகள் மீண்டும் கூடி உள்ளனர். அங்கு அவர்கள் தீவிரமாக இயங்கி வருகிறார்கள். இப்போது யேமன் பின்லேடனின் தளமாக மாறி உள்ளது.

பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் பயன்படுத்திய கட்டடங்களில் இஸ்ரேல் உளவுப் படை நடத்திய சோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ஆவணங்களின்மூலம், பின்லேடன் யேமன் நாட்டுக்குத் தப்பி ஓடியது தெரியவந்துள்ளது. (ஒ)

# பளைப் பகுதி பாடசாலைகளில் வகுப்பறைகள் அமைக்கப்படும்

யுனிசெவ் நிறுவனத்தினர் பளைப் பிரதேசத்தில் உள்ள நான்கு பாட சாலைகளுக்குத் தற்காலிக வகுப் பறைக் கொட்டகைகள் அமைக்கவும், இரு பாடசாலைகளில் மலசலகூடம் அமைக்கவும் ஒன்பது லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர்.

கோவில்வயல் அ.த.க.பாடசாலை, இயக்கச்சி அ.த.க.பாடசாலை, பளை மத்திய கல்லூரி, பளை றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு தலா ஒரு லட்சத்து 60ஆயிரம் ரூபா செல வில் வகுப்பறை கொட்டகைகளும்- பளை மத்திய கல்லூரி, முகாவில் அ.த.க.பாடசாலை ஆகியவற்றுக்குத் தலா ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் மலசலகூடங்களும் அமைக கப்படவுள்ளன.

பளை மத்திய கல்லூரி, இயக்கச்சி அ.த.க.பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்கி வருவதாகவும்-அடுத்த ஆண்டு தவணை ஆரம்பமாவதற்கு முன்னர் இவை அமைத்து வழங்கப்படுமென வும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## வேலையாள் தேவை

கண்ணாடிக் கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. பழக விரும்புவோரும் விரும்பத்தக்கது.

தொடர்பு:
விளம்பர இல. - 1702,
மே/பா.உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(10724)

## கருணா கிளினிக்

மாங்குளம், மல்லாவியில் இயங்கிய 'கருணா கிளினிக்' 11.11.2002முதல் சங்கானை பிரதான வீதியில் தபாற்கந்தோர் முன்பாக இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

Dr.இ.செல்வநாயகம்
*உரிமையாளர்*

(10717)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பூவுலகில்
14 - 01 - 1909



விண்ணுலகில்
20 - 10 - 2002

### அமரர் தம்பிராசா இரத்தினம்

*(இளைப்பாறிய அதிபர்)*

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன் ஆறுதல் தந்து உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண் டோருக்கும், தொலைபேசி, தந்தி, தபால்மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகளைப் பிரசுரித்தோருக்கும், பத் திரிகைமூலம் துயர் பகிர்ந்தோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கல்ந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

டாக்டர் இ.கௌரிபாலன் (மகன்),
த. தவராசா (ஆசிரியர் - மருமகன்).

*"மிதிலை",*
*கரணவாய் கிழக்கு, கரவெட்டி.*

(10604)

## மாவீரர் தின கவிதைப் போட்டி

### மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழ் தொலைக்காட்சி இணையமும் (TTN), 'உதயன்' நிறுவனமும் இணைந்து நடத்தும்

### கவிதைப் போட்டி

தலைப்பு
**'தமிழீழ போராட்ட வரலாறு'**

வயது வேறுபாடின்றி இருபாலாரும் பங்கேற்கலாம். கவிதைகள் ஏ-4 தாளின் ஒரு பக்கத்தினுள் உள்ளடங்க வேண்டும்.

| | |
|---|---|
| முதல் பரிசு: | 5000 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 3000 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 2000 ரூபா |

21-11-2002 இற்கு முன்பாக சுயவிவரங்களுடன் கவிதையை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 'உதயன்' பணிமனைக்கு அனுப்பிவைக்கவும். கவிதைகளை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மாவீரர் தின கவிதைப் போட்டி" எனக் குறிப்பிடவும். தெரிவு செய்யப்படும் கவிதைகள் பின்னர் உதயனில் பிரசுரிக்கப்படும்.

மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

(சி-24947)

உதயன் தமிழ் தொலைக்காட்சி இணையம் (TTN)

## விழிநீர் சொரிந்து நிற்கும் முதல் ஆண்டில் உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கிறோம்



# அமரர்
# கந்தையா பன்னிருகரம்

*(முன்னாள் உரிமையாளர், நியூ கௌரி மிதிவண்டி வாணிபம் - நெல்லியடி)*

(திதி: 2002-11-19)

ஊர் போற்ற வாழ்ந்தீர்கள்!
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்!
பிள்ளைகள் உயர்ந்திட உழைத்தீர்கள்!
~ இறுதியாய்
கண்ணீரில் நனையவிட்டு சென்றீர்கள்!
நீங்கள் காட்டிய பாதையில் வாழ்ந்து
உயர்ந்திட வழிகாட்டியாய்
என்றும் எங்களுடன் வாழ்ந்திடுவீர்கள்!

- குடும்பத்தினர்.

மண்ணில் உயிர்ப்பு
1944-01-15

விண்ணில் சங்கமம்
2001-11-30

*"சாந்தி பவனம்"*
*கொற்றாவத்தை,*
*கரவெட்டி.*

(10721)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

நெடுந்தீவு மீண்டும் கொந்தளிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது.

அங்குள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) அலுவலகம் சிறிது காலத்துக்கு முன்னர் பொதுமக்களின் பாய்ச்சலுக்கு இலக்கானதையடுத்து, அங்கிருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேறியிருந்தனர்.

மீண்டும் கடந்த சனிக்கிழமை நள்ளிரவுக்குச் சற்றுப்பின் - அதிகாலை வேளை- இருட்டோடு இருட்டாக - சுமார் 40 ஈ.பி.டி.பியினர் கடற்படையினர் மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புத் துணையுடன் அங்குபோய் இறங்கியுள்ளனர். இதனையடுத்தே நெடுந்தீவு, கொந்தளிப்புக்குள்ளாகியிருக்கின்றது.

நெடுந்தீவில் நிலைகொண்டு, அதைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஈ.பி.டி.பியினர் உறுதியாக முயன்றுவருகின்றனர்.

அதேபோல, அவர்களை அங்கிருந்து விரட்டி சுதந்திரக் காற்றைத் தொடர்ந்து சுவாசிக்க வேண்டும் என்பதில் அங்குள்ள பெரும்பாலான மக்கள் - மிகத் தீவிரமாக - உறுதியாக - விடாப்பிடியாக- இருப்பதும் தெளிவாகத் தென்படுகின்றது. ஈ.பி.டி.பியினரின் பிரசன்னத்தை ஆட்சேபித்து வெயில் - மழை, இரவு - பகல் பாராமல் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திவருவது இதனைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆசியோடு 1990களின் பிற்பகுதியில் தீவகத்துக்குள் புகுந்ததுமுதல் கடந்த சில மாதங்கள் வரை நெடுந்தீவு உட்பட தீவகத்தின் பெரும் பகுதி ஈ.பி.டி.பியின் அதிகாரப் பிடிக்குள்தான் இருந்தது.

தீவகத்துக்குள் ஏனைய ஜனநாயக அரசியற் கட்சிகள் செல்லமுடியாதவாறு அராஜகச் செயல்கள் தொடர்ந்ததும், அதனால், அதனை அடிமைத் தீவு (SLAVE ISLAND) என்று அரசியல்வாதிகள் வர்ணிக்கும் அளவுக்கு மோசமான நிலைமை காணப்பட்டதும் தெரிந்தவைதான்.

அங்குள்ள மக்கள் தமது சுதந்திர உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதவாறு அடக்கி ஒடுக்கப்பட்டதும், தேர்தல் பிரசாரத்துக்குச் சென்ற ஜனநாயகக் கட்சிகளின் அரசியல்வாதிகள் பயங்கர ஆயுதங்கள் சகிதம் வழிமறிக்கப்பட்டு காடையர்களால் தாக்கி, வெட்டி, சுட்டுப் படுகொலைகள் செய்யப்பட்டும், கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டும் அட்டூழியம் புரியப்பட்டதும் மறக்கக்கூடிய செயல்கள் அல்ல.

ஆயுத முனையில் மக்கள் அடக்கப்பட்டிருந்ததால் அவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்தனர். இன்று ஆயுதங்கள் களையப்பட்டதும் மக்களின் உணர்வு அடிமனதிலிருந்து கொந்தளித்துப் பீறிடுகின்றது.

பயங்கர ஆயுதங்களை வைத்துக்கொண்டு மக்களை அடக்கி வைத்திருந்தவர்கள், ஆயுதங்கள் இல்லாததால் மக்களின் எழுச்சிக்கு முகங்கொடுக்க முடியாது திணறுகின்றார்கள். நள்ளிரவு வேளை - இருட்டோடு இருட்டாக - கடற்படை, பொலீஸ் துணையை அழைத்துக்கொண்டு அரவம் இல்லாமல் ஊருக்குள் நுழையும் நிலைமை.

சரியோ, பிழையோ - குளறுபடித் தேர்தலோ, நியாயமான தேர்தலோ - எப்படியாயினும் நெடுந்தீவுப் பிரதேச சபை இன்று ஈ.பி.டி.பியினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. பதவிக்காலம் முடிந்த பின்னரும், பதவி நீடிப்பின்மூலம் பிரதேச சபையை அவர்கள் தக்கவைத்திருந்தாலும், பிரதேச சபை அவர்களின் பொறுப்பில்தான்.

பிரதேச சபை நிர்வாகத்துக்காக நெடுந்தீவில் தாங்கள் இருக்கவேண்டும் என்று தமது வருகையை அவர்கள் நியாயப்படுத்துகின்றார்கள். அதைத் தவறு என்று காட்டுவது எமது எண்ணமல்ல.

அதேபோன்று, ஜனநாயகக் கட்சி ஒன்றின் (அவர்கள் ஜனநாயக முறையில் நடந்து கொண்டார்களா என்று பலராலும் கேட்கப்படுவது வேறு விடயம்) செயற்பாட்டை அச்சுறுத்தித் தடை செய்வதையும் நாம் அங்கீகரிக்கவில்லை.

ஆனால், அதற்காகக் கடந்த காலத்தில் நடந்தவற்றை - நடந்துகொண்ட முறைகளை- மூடி மறைத்துவிட்டு, இப்போது காரியம் சாதிக்கலாம் என்று சம்பந்தப்பட்டவர்கள் எண்ணினால், அது தப்புக் கணக்காகப் போய்முடியும். இதனை இப்போதைய நெடுந்தீவு சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன என்பதை நாம் சுட்டிக்காட்டித்தான் ஆக வேண்டும்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று தெரியாமலா சொல்லி வைத்தார்கள்!

# விடுதலைப் புலிகளுக்கு போட்டியாக
# எனது பொலீஸ் அமைப்பொன்றை தெற்கில் ஏற்படுத்தப்போகிறேன்!

## முன்னாள் பிரதி அமைச்சர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு,நவ.19

முன்னைய அரசில் பிரதி அமைச்சராகப் பதவி வகித்த மேவின் சில்வா, தென்மாகாணத்தில் தான் தனியான பெலீஸ் அமைப்பொன்றை ஏற்படுத்தி, அதற்கான பொலீஸ் நிலையங்களை நிறுவப்போவதாகவும் - அவற்றுக்குப் பொறுப்பதிகாரியாகத் தானே பதவி வகிக்கப்போவதாகவும் - கூறியிருக்கிறார்.

அடுத்த வருடம் மார்ச் மாதத்திற்குள் ஐ.தே.மு. அரசு பதவியில் இருந்து இறக்கப்படாவிட்டால், தென்பகுதி இளைஞர்களின் ஆதரவுடன் பொலீஸ் திணைக்களங்கள் புதிதாகத் திறக்கப்படுமென்று மேவின் சில்வா மேலும் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவிக்கு வந்து எட்டு வருடங்கள் பூர்த்தியடைந்தமையைக் குறிக்கும் முகமாக அண்மையில் மருதானைச் சந்தியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே மேவின் சில்வா இவ்வாறு குறிப்பிட்டார்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் வடபகுதியில் பொலீஸ் நிலையங்களைத் திறக்கமுடியுமானால், தன்னால் தென்னிலங்கையில் ஏன் பொலீஸ் நிலையங்களைத் திறக்கமுடியாது என்றும் அவர் அப்போது கேள்வி எழுப்பினார்.

இந்த அரசினால் ஜனாதிபதியைக் கவிழ்க்க முடியாது என்று அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க உரையாற்றுகையில்:-

'ஐ.தே.மு. அரசு, இரண்டு வருடங்களுக்கு நாட்டை ஆள அனுமதிப்போம். அதன் பின்னர் அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த அரசைக் கலைத்துவிடுவார்' - என்று தெரிவித்தார்.

(ஒ)

# உற்பத்திப் பொருளை விற்கும்போது இடைத்தரகரால் நஷ்டமேற்படுகிறது!

## சந்தை நடைமுறை குறித்து விவசாயிகள் விசனம்

வலிகாமம் தெற்கு,நவ.19

குடாநாட்டின் பிரபல சந்தைகளுக்குத் தமது உற்பத்திப் பொருளகளை விற்கக் கொண்டுசெல்லும் விவசாயிகள் இடைத்தரகர்களின் கட்டுப்பாடற்ற நடைமுறைகளால் நஷ்டத்தை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வியாபாரிகள் விற்பனைக்காகக் கொண்டுவரும் பொருள்களில் கழிக்கப்படவேண்டிய பாகங்களுக்கான நிறை என்று கூறி, மொத்த நிறையில் குறிப்பிட்ட ஓர் அளவு கழிக்கப்படுவது வழக்கம். ஆனால், இடைத்தரகர்களினால் சந்தைக்குச்சந்தை மட்டுமன்றி, ஒரே சந்தையிலும் இக்கழிப்பனவு அளவு வித்தியாசப்படுகிறது. இந்த நடைமுறையைக் காரணங்காட்டி தரகர்கள் கூடுதலான அளவில் கழிப்பனவு செய்வதால் தாம் பெரிதும் நஷ்டமடைய வேண்டியிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இக்குறைபாட்டை நீக்குவதற்கு சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளில் மேசைத்தராசை உபயோகிக்கவும் - உற்பத்திப் பொருள்களுக்கான நியாயமான கழிவு அளவுகள் குறிக்கப்பட்ட விளம்பரப் பலகைகள் சந்தைகளில் வைக்கப்படவும் - நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் விவசாயிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

விலை நிர்ணயம் செய்வதிலும் தாம் ஏமாற்றப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர். பொருள்களை ஆரம்பத்தில் பார்த்து மதிப்பிட்டு விலைபேசும் சந்தை வியாபாரிகள், பொருள்களை எடுத்துச் சென்று தமது இடத்தில் கொட்டிவிடுகின்றனர். அதன் பின்னர் அப்பொருள்களில் வேண்டுமென்றே குறைகண்டு பிடித்து, பேசிய விலையிலும் பார்க்க குறைந்த தொகையையே வியாபாரிகளுக்குக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது.

அதனை ஏற்கமறுத்தால், பொருள்களை எடுத்துச்செல்லுமாறு கூறப்படுகிறதாம். இதனால், பெரும்பாலான விவசாயிகள் தருவதை வாங்கிக்கொண்டு திரும்ப நேரிடுவதாகக் கூறப்படுகிறது. சந்தைகளுக்கான நடைமுறைகள் ஒழுங்கமைக்கப்பட்டு தரகர்களின் பணிகள் கட்டுப்படுத்தப்பட்டால் தாம் நஷ்டப்பட வேண்டியிருக்காது என்றும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-152-10-5)

# கால்நடை வளர்ப்போருக்கு கடன் வழங்கும் திட்டம்

## வடமராட்சி தென்மேற்கு சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.19

வடமராட்சி தென்மேற்கு கால் நடைவளர்ப்போர் சங்கம் அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது என சங்கத்தின் செயலாளர் க.தம்பிராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் மேற்படி பகுதி மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்துள்ளனர். அதேவேளை, அவர்களின் கால்நடைகளும் அழிந்துள்ளன. இதனால், மக்கள் வருமான ரீதியாகவும் இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

எனவே, இந்தநிலையில் மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகவுள்ள கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

குறித்த சங்கத்தில் தற்போது 200இற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் தம்மைப் பதிவுசெய்துள்ளனர். மீளக் குடியமர்ந்தவர்கள் மற்றும் புதிய அங்கத்தவர்கள்கூட தற்போது சங்கத்தில் இணைந்து வருகின்றனர்.

சங்கத்தில் தற்போது போதிய நிதி இல்லாமையால் மக்களுக்கு உடனடியாக உதவமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனினும், அங்கத்தவர்களுக்கு உதவுவதற்கென வங்கியில் கடன் பெறவுள்ளோம். அத்துடன், அச்சுவேலி பண்ணையில் இருந்தும் கோழிக்குஞ்சுகளை கடனடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

விரைவில் ஆடு, மாடு வளர்ப்பு மற்றும் பண்ணைத் திட்டங்களின் விருத்தி குறித்தும் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன- என்றார். (எ-12)

### நாளை

கார்த்திகை 04
புதன்கிழமை
(20.11.2002)
திதி : பூரணை
காலை 7.36வரை.
நட்சத்திரம: கார்த்திகை
முன்னிரவு 8.26வரை.
விநாயகர் விரதம் ஆரம்பம்
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : [illegible]
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஆண்கள் வெற்றியை மட்டுமே விரும்புகின்றனர். ஆனால், பெண்கள் வெற்றி பெற மட்டுமன்றி வெல்லப் படவும் விரும்புகின்றனர்.

## தரம் 9 பொதுப் பரீட்சையின்
# கணிதபாட வினாக்களில் தவறு என்று முறைப்பாடு!

வலிகாமம் தெற்கு,நவ.19

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் இவ்வருடம் நடத்தப்பட்ட தரம் ஒன்பதுக்கான பொதுப் பரீட்சையில் கணித பாட வினாக்களில் பல தவறுகள் காணப்பட்டதாகக் கணித பாட ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கணித பாடம் பகுதி ஒன்றின் 19ஆவது கேள்வியிலும், பகுதி இரண்டில் மூன்று வினாக்களிலும் தவறுகள் காணப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. மேற்படி பரீட்சைக்கான விடைத்தாள்கள் வலய ரீதியாக ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு மதிப்பீடுகள் நடைபெற்றன.

மதிப்பீட்டு நிலையங்களில் மேற்படி கணக்குகளுக்கு புள்ளிகள் வழங்கும்போது போதிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளாமையால் இடத்துக்கு இடம் வெவ்வேறு வகைகளில் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைய பொதுப் பரீட்சையாக தரம் ஒன்பது மாணவர்களுக்கென நடத்தப்பட்ட இப்பரீட்சையில், கேள்வித் தாள்களில் ஏற்பட்ட தவறுகளும், மதிப்பீடு செய்யும்போது வெவ்வேறு வகையிலான புள்ளிகள் இடப்பட்டமையும் மாணவர்களின் பெறுபேறுகளை பாதிக்கச் செய்யும் எனவும் ஆசிரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(ஒ-152)

# உயர் தொழில்நுட்ப நிறுவன கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாண உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் 2003 ஆம் ஆண்டில் ஆரம்பமாகும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர்தேசிய கணக்கியல்(பகல், மாலை), உயர்தேசிய முகாமைத்துவம், தேசிய வியாபாரக் கல்வி, தேசிய ஆங்கிலக் கற்கை ஆகிய டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி டிசெம்பர் 10ஆம் திகதியாகும்.

விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் 'பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், 98, வார்ட் பிளேஸ், கொழும்பு - 7' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பும்படியும் -

மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அருகேயுள்ள உ்யர்தர தொழில்நுட்ப நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளும்படியும் -

பணிப்பாளர் ரி.ராஜரத்தினம் அறிவித்துள்ளார். (ஒ)

# பெருந்தோட்டப் பணியாளருக்கு!

பளை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, தென்னந் தோட்டங்களில் இரண்டாயிரமாண்டு மார்ச் மாதம்வரை பாதுகாவலர்களாகவும், தொழிலாளர்களாகவும் பணிபுரிந்த அனைவரையும் மீண்டும் வேலைக்கு அமர்த்தல் சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பளையில் இயங்கும் வேம்பொடு கேணிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்காலப்பகுதியில் தொழில் புரிந்த அனைத்து பாதுகாவலர்கள், தொழிலாளாகளையும் தவறாது சமுகமளிக்குமாறு பளை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைப் பொறுப்பதிகாரி எஸ்.தவரத்தினசிங்கம் கேட்டுள்ளார். (ஒ-182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.11.2002

# சுடர் ஒளி

விலை -14/-

இராணுவச் சிக்கல்கள் தணிந்துபோக அரசியல் விவகாரங்கள் இழுபறியில்!

கொள்ளை போகின்றன யாழ். அரும்பொருள்கள்

தாய்வான் கண் சிகிச்சைக்கு யாழில் வாயாரப் பாராட்டு 20பேர் நிபுணர் குழுவின் இணையற்ற சேவை

காஞ்சிரங்குடா படுகொலைச் சம்பவம் அறிக்கைகள் வெளிக்காட்டும் சர்ச்சைகள்




நோர்வேயை ஓரங்கட்ட ஜனாதிபதி கடும் முயற்சி

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வும் அரசு எதிர்கொள்ளும் புதிய சவால்களும்

எதிரிகளை தேர்தலில் சந்திக்க மூன்றாவது அணி அமைக்கும் ரஜினி

மற்றும் இணையத்தளத்தில் இருந்து, பித்தன் பதில்கள், இலவச மருத்துவ ஆலோசனை, சினிமா, சிறுவர், விளையாட்டு உட்பட பல்வேறு அம்சங்கள்.

(C-24944)




சுவாமி அருட்பிரகாச வள்ளலார்

தயவு

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே!



சுவாமி சரவணாணந்தா அவர்கள்



தோற்றம்: 1932.11.07

# அந்தியேட்டி அழைப்பு

தயவுடையீர்!

*21.10.2002 அன்று சிவபதமடைந்த*

## அமரர் சண்முகம்பிள்ளை கனகசபாபதிப்பிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (20.11.2002) புதன்கிழமை 12 மணியளவில் வித்தகம் பெரியமாவடி, உப்புக்கேணி, சாவகச்சேரியில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தயவுடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு எமக்குப் பலவிதத்திலும் அனுதாபந் தெரிவித்த அன்புள்ளங்கள் அனைத்துக்கும் நாம் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
சுத்த சன்மார்க்க சங்கத்தவர்கள்.

*கேணிக்கரை,*
*அளவெட்டி.*

(10642)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை அரசியல் பிரச்சினை ஆக்கப்படுமா?

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு உயர் நீதிமன்றம் 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தபோதிலும் அதை நிறைவேற்றச் சாத்தியங்கள் இல்லை என்பதை அனைவரும் அறிவர். தெற்கில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளக்காரணமான ஜே.வி.பியினருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. அதன்மூலம் அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது. பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து அரசோ, மக்களோ, உலக சமூகமோ அலட்டிக்கொள்ளவில்லை. இவர்கள் அனைவருக்கும் தற்போது தேவைப்படுவது சமாதானமே. இவை குறித்து ஆராய்கிறார் பிரபல சட்டவல்லுநர் கோமின் தயாசிறி. "லங்காதீப" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீலங்கா மத்திய வங்கிக் கட்டடம் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொண்ட தன்மூலம் கட்டடத்துக்குச் சேதம் விளைவித்ததோடு அங்கு கடமையிலிருந்த நூற்றுக்கும் அதிகமான ஊழியர்களதும், அருகில் பயணித்துக்கொண்டிருந்த சில பிரயாணிகளினதும் மரணத்துக்குக் காரணமானார் என்ற குற்றச்சாட்டின்பேரில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு



கொழும்பு உயர் நீதிமன்றம் 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. கடந்த காலங்களில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வேறு சில தாக்குதல்கள் தொடர்பாகவும் அவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இந்திய அரசு தொடுத்த வழக்கில் பிரபாகரன் குற்றவாளியாகக் காணப்பட்டு இந்திய நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. பிரபாகரனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு தமிழக, மத்திய அரசுகள் கோரிக்கை விடுத்தபோதும், ஸ்ரீலங்கா அரசு இவ்விடயம் தொடர்பாக எவ்வித சாதகமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையேயான இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சு தாய்லாந்தில் ஆரம்பமாகிய சமயத்தில், கொழும்பு உயர்நீதிமன்றம் பிரபாகரனுக்கு 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளமை முக்கியத்துவமான விடயமாகும். ஆயினும், அரசு இது விடயம் தொடர்பாக எதுவித கருத்தும் வெளியிடவில்லை. தாய்லாந்துப் பேச்சுக்குப் பின்னர், பேச்சுக்களில் ஸ்ரீலங்கா அரசுக் குழுவின் தலைவராகக் கலந்துகொண்ட அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கண்டிக்குச் சென்று மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்த சமயம், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனக கூறியுள்ளார். ஸ்ரீலங்கா அரசும் இவ்வகையான நிலைப்பாட்டையே கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. சர்வதேச சட்ட அமைப்புக்களின் நடவடிக்கைகளை அவதானிக்கும்போது இது போன்ற நிலைப்பாட்டையே காணமுடிகிறது. சர்வதேச சமூகமும் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட தண்டனை பற்றி மௌனம் சாதிக்கின்றது. அதற்கும் காரணம் உள்ளது. இன்று நம் நாடும், உலக நாடுகளும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்கள் பற்றியே கவனம் செலுத்துகின்றன. எனவே, அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலானது நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை அப்படியே அமுக்கிவிட்டுள்ளது.

இந்நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக அரசின் சமாதான முயற்சிகள் தோல்வியடையுமா? அன்றேல் அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையே பாரதூரமான பிரச்சினைகள் உருவாகுமா? எனச் சிந்திப்பவர்களும் நாட்டில் உள்ளனர். ஆயினும், அவ்வாறான சிக்கல்கள் தோன்றுவதற்கான எவ்வித அறிகுறிகளையும் காணமுடியவில்லை. இச்சம்பவம் தொடர்பாக மட்டுமல்ல, வேறு காரணங்கள் சம்பந்தமாகவும் அரசியல் மட்டத்திலான தீர்மானங்கள் மூலமே நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். அந்தவகையில் மேற்குறிப்பிடப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு தொடர்ந்தும் வலுவுள்ளதா என்பது குறித்து சிந்திக்கவேண்டியதில்லை. இந்த நிலைமையின்படி அரசியல் நிர்வாகத்தின் முன்பாக மேல்நீதிமன்றம் செயலற்றுப்போவதாக ஒருவர் வாதிடலாம். சிலசமயம் அரசியல்வாதிகள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஓர் அமைப்பு என்ற வகையிலேயே நீதிமன்றத்தைக் கருதுவதாகத் தோன்றுகிறது. பிரபாகரனுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசு மட்டுமல்ல, முக்கிய எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணியும் மௌனம் சாதித்து வருகிறது. ஆகவே, உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென சிஹல உறுமய

**தமிழில்: வீயெஸ்ரீ**

போன்ற சில சிறிய கட்சிகள் மட்டுமே வற்புறுத்துகின்றன.

நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து அரசின் இயலாமைக்குக் காரணம் வன்னிக் காட்டில் மறைந்திருக்கும் பிரபாகரனைக் கைதுசெய்யமுடியாத நிலைமையே ஆகும். அது ஒரு சிக்கலான விடயம் என்பது உண்மையே. ஆயினும், அரசு நீதிமன்றத்துக்குக் கௌரவமளிப்பதாயின் இத்தீர்ப்பின் பின்னர் அது குறித்து உத்தியோக பூர்வமான அறிக்கை வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால், அரசு அவ்வகை நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வில்லை. இந்தியாவின் தமிழ்நாடு அரசு இதுகுறித்து பெரிய அளவிலான கருத்து வெளியிட்டுள்ளது. அது மட்டுமன்றி, அன்ரன் பாலசிங்கம் இந்தியாவினூடாக ஸ்ரீலங்காவுக்கு விமானப் பயணம் செய்வதற்கான அனுமதியை வழங்க இந்திய மத்திய அரசு மறுத்துள்ளது. இவ்வளவுக்கும் இன்று இந்தியாவில் பதவியில் இருப்பது பாரதீய ஜனதா கட்சியே தவிர ராஜீவ் காந்தி தலைமை தாங்கிய காங்கிரஸ் கட்சியல்ல. இருந்த போதும் தமது நாட்டின் [illegible] யில் உள்ள சட்ட திட்டங்களைப் பேணுவதில் இந்தியா ஓர் உயர்மட்டத்தில் நாட்டின் கௌரவத்தைப் பேணிவருவதாகத் தோன்றுகிறது.

இவ்வகையான பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் பெருமளவிலான போர்க்கால குற்றங்கள் புரிந்தவர்கள் தொடர்பாக முற்காலத்தில் உலகின் பல நாடுகளில் பதவி வகித்த அரசுகள் எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டன என்பது பற்றி அறிந்துகொள்வது இவ்வேளையில் பொருத்தமாக இருக்கும். 1945 இல் இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்தவேளையில் ஜேர்மனியில் யுத்தகால குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக வெளிப்படையான வகையில் நியூரம்பர்க் வழக்கு விசாரணை இடம்பெற்றது. இவ்விசாரணைகள் யாவும் நீதிமன்றங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டமையால் உலகம் பூராகவும் பிரபல்யம் பெற்றன.

ஹிட்லரின்கீழ் இயங்கிய ஹர்மன்கோரிங், ரடோல்ப் ஹெஸ் மற்றும் பீல்ட் மார்ஷல் கிடில் உட்பட்ட பிரபல நாஜி இராணுவ அதிகாரிகள் சிலருக்கு எதிராக இடம்பெற்ற நியூரம்பர்க் வழக்கு விசாரணைகளின் முடிவில் அவர்களுக்கு மரண தண்டனைகள் விதிக்கப்பட்டு, பின்னர் அவை நிறைவேற்றப்பட்டன.

மற்றுமொரு நாஜி இராணுவக் குற்றவாளியான அடோல்ப் ஈஸ்ட்மன் நியூரம்பர்க் வழக்கு விசாரணைக்கு தோற்றாமல் வடஅமெரிக்காவுக்குத் தப்பியோடிவிட்டார்.

அவர் தம்மை உருவமாற்றம் செய்துகொண்டதோடு தம் பெயரையும் மாற்றி, மறைந்து வாழ்ந்து வந்த சமயம் 1962இல் இஸ்ரேலிய உளவுப் பிரிவினரால் அடையாளம் காணப்பட்டு ஜெருசலேம் நகருக்குக் கொண்டு வரப்பட்டார். கடைசியில் ஜெருசலேமில் அவருக்கு எதிராக நடைபெற்ற வழக்கு விசாரணையின் முடிவில் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இஸ்ரேல் இதனால் திருப்தி அடைந்தபோது, இவ்விடயத்தில் ஜேர்மனிய அரசு மகிழ்ச்சி அடையவில்லை.

1998இல் றுவாண்டா அரசின் முன்னாள் பிரதமர் கம்பண்டா, தனது பயங்கரவாத நடவடிக்கைகளால் உயிரிழப்புக்களை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, வழக்கு விசாரணையின் பின்னர் தண்டிக்கப்பட்டார். சமீபத்தில் ஜெனீவா நகரில் சர்வதேச யுத்தக் குற்றவாளிகள் நீதிமன்றத்தில் யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சிலோ பொடன் மிலோசெவிக் விசாரணைக்காக நிறுத்தப்பட்டுள்ளார். ஆயிரக்கணக்கானவர்களை இனப்படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் விசாரணையை எதிர்நோக்குகின்றார். இதேபோன்று, முன்னர் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் சியா-உல்-ஹக்கின் நிர்வாகத்தால், அதற்கு முன்னர் பிரதமராகப் பதவிவகித்த சுல்பிகார் அலி பூட்டோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தமக்கெதிரான கருத்துக்கொண்டோர் பலரை இரகசியமான முறையில் படுகொலை செய்வித்தார் என்ற குற்றச்சாட்டு அவர்மீது சுமத்தப்பட்டது. பிலிப்பைன்ஸ் தேசத்து முன்னாள் ஜனாதிபதி பெர்டினண்ட் மார்க்கோஸ் ஜனாதிபதிப் பதவியைத் துறந்து நாட்டை விட்டுத் தப்பியோடிய பின் பிலிப்பைன்ஸ் அரசு அவருக்கு எதிராக வழக்கு நடத்தியது. அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த பெனிக்னோ அக்கினோ கொலையுண்டமை மற்றும் நாட்டுப் பொதுமக்களின் சொத்துக்களைக் கைப்பற்றியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்பட்டன. ஆயினும், மார்க்கோஸ் மரணமடைந்ததையடுத்து விசாரணை கைவிடப்பட்டது.

இந்த வகையில், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் யுத்தகாலக் குற்றங்கள்மூலம் அப்பாவி மக்களைக் கொலை செய்தவர்கள், பொதுமக்களின் சொத்துக்களை நாசம் செய்தோர் ஆகியோருக்கு எதிராக பல்வேறு நாடுகள் பல்தரப்பட்ட வகைகளில் சட்ட நடவடிக்கைகள் மூலம் அவ்வவ் நபர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கிய சம்பவங்கள் தெரியவந்துள்ளன. அவசியமாயின் இந்த வழமையின் பிரகாரம் நாமும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

நீதித்துறை வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்களின்படி பிரபாகரன் சம்பந்தமான வழக்கு நடவடிக்கைகள் இதுவரையில் முடிவடையவில்லை எனத் தெரியவந்துள்ளது. பிரபாகரனுக்கு கொழும்பு உயர்நீதிமன்றமே இத்தண்டனையை வழங்கியிருந்தது. இத்தண்டனையை அவர் ஆட்சேபிப்பதாயின் மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்ய அவருக்கு உரிமை உண்டு. மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு அவருக்குப் பாதகமாக அமையும் சந்தர்ப்பத்தில் உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்ய இடமுண்டு. இவை யாவற்றிலும் அவர் குற்றவாளியாகக் காணப்படின் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை கைதுசெய்யப்படும் தினம் முதல் நடைமுறைக்கு வரும். ஆனால், அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தேவையான அவருக்கு விதிக்கப்பட்ட சகல தண்டனைகளையும் ரத்துச் செய்து பொதுமன்னிப்பு வழங்குவதற்கு நாட்டின் ஜனாதிபதிக்கு சட்டப்படியான அதிகாரம் உண்டு. எதிர்காலத்தில் இவ்விடயத்தில் இவ்வாறான நடவடிக்கை இடம்பெறக்கூடும். எவ்வகையிலாவது பிரபாகரன் உட்பட்ட பிரதிவாதிகள் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யாதுவிடில் கொழும்பு உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு உறுதிசெய்யப்படும்.

இதனிடையே மற்றொரு பிரச்சினையும் தலைதூக்கியுள்ளது. தற்போது ஸ்ரீலங்கா அரசின் சட்டதிட்டங்கள் எதனையும் ஏற்றுக்கொள்ளாத பிரபாகரன் உட்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, எவ்வகையிலாவது இவ்வழக்கின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய முன்வந்தால், அவர்கள் ஸ்ரீலங்கா அரசின் நீதிமுறைகளுக்குக் கட்டுப்படுவதாகக் கருதப்படுவதோடு, இது சம்பந்தமாக மேற்கொண்டும் ஸ்ரீலங்கா அரசின் சட்டதிட்டங்களை அனுசரிக்கவேண்டிய பொறுப்புக்கு உள்

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

ளாகும் பாதகநிலை தோன்றும். சில நாள்களின் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் கொழும்பு ஊடாக தாய்லாந்து சென்றபோதும், அதற்கு முன்னர் ஒருசமயம் அன்ரன் பாலசிங்கம் மாலைதீவிலிருந்து 'கடல் விமானம் மூலம் பயணித்து இரணைமடு குளத்தில் சென்று இறங்கிய சந்தர்ப்பத்திலும் அவர்கள் ஸ்ரீலங்கா அரசின் கடவுச் சீட்டுக்களையும்,' விசா அனுமதியையும் பாவித்ததோடு, அவை முறைப்படி கையாளப்பட்ட பின்னரே பிரயாணத்தை மேற்கொண்டனர். இவையாவும் ஸ்ரீலங்காவின் அரச நீதிக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட நடவடிக்கைகளாகும். எனவே, பிரபாகரனுக்கு தம் வழக்குத் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதால் கௌரவப் பாதிப்பு ஏற்படும் எனக் கூறமுடியாது. தேவையாயின் குறிக்கப்பட்ட கால எல்லை முடிவடையுமுன்னர் அவரால் இவ்வழக்கின் தீர்ப்புத் தொடர்பாக மேன்முறையீடு செய்ய இயலும்.

மத்திய வங்கி குண்டுவெடிப்பு தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு அரசியல் ரீதியான சிறந்த பதில் உள்ளது. ஆயினும், அது சட்டப்படி செல்லுபடியானதல்ல. மத்திய வங்கிக் கட்டடம் மீதான தாக்குதல் யுத்த சூழ்நிலையில் இடம்பெற்ற தாக்குதல் எனப் பொதுவாக விடுதலைப் புலிகள் அமைப்பு கூறியது. அரசு கூட இதுபோன்ற சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படக் காரணமாயிருந்ததென விடுதலைப் புலிகள் கூறியிருந்தனர். விடுதலைப் புலிகள் அவ்விதம் கூறியிருந்த போதிலும், அப்பாவிப் பொதுமக்கள் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் கொல்லப்பட்ட சம்பவங்கள் பற்றி (யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்டோர் தவிர்ந்த) அரசு அறிய நேர்ந்த சந்தர்ப்பங்களின்போது, அவைபற்றி நாட்டில் நடைமுறையி



லிருக்கும் சட்டவிதிகளின்கீழ் விசாரணைகள் மேற்கொண்டு, குற்றமிழைத்தோருக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது.

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்குப் போன்றே, ஒருசமயம் திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலை பற்றியும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. செம்மணிப் படுகொலைகள் பற்றி விசேட நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்பட்டன. அண்மையில் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் அருகில் இடம்பெற்ற சம்பவம் பற்றியும் உயர்மட்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டு, அதன்மூலம் பொலீஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பேரில், அவர்கள் குற்றமற்றவர்கள் எனத்தீர்ப்பளிக்கப்பட்டபோதும், அம்முகாமில் கடமையாற்றிவந்த சகல அதிகாரிகளும் வேறு இடங்களுக்கு இடமாற்றப்பட்டதாக அறிகிறோம். அது மட்டுமன்றி அவ்வாறு அச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசினால் நட்டஈடு வழங்கப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தவகையில் வடபகுதியில் மட்டுமல்ல, தென்பகுதியிலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சில சம்பவங்கள் தொடர்பாக வழக்கு விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் நிறைய உண்டு. இவற்றில் எம்பிலிப்பிட்டியவில் இடம்பெற்ற பாடசாலை மாணவர் கொலைச் சம்பவம் மிகப் பிரசித்திபெற்றதொன்றாகும். இந்த விதத்தில் அரசு தரப்பில் உண்மையான சாட்சியங்கள் பெறப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இராணுவத்தினரால் புரியப்பட்ட குற்றங்களுக்கு நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளின் பிரகாரம் தண்டனை வழங்கப்பட்டது. எனவே, பிரபாகரன் விடயத்தில் அரசு நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய நியாயமான காரணம் உள்ளது.

அரசு நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாதுவிடின் அது எதிரணியிலுள்ள ஒருசில சிறு அரசியல் கட்சிகளுக்கு அரசைக் குறைகூற ஓர் ஆயுதம் ஆகிவிடும். நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசு நடைமுறைப்படுத்தவில்லையெனக் கூறி அவர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கக்கூடும். அவ்வாறு நீதிமன்றத்தால் குற்றவாளியெனக் காணப்பட்ட நபருடன் அரசு உத்தியோகபூர்வமான அமைதிப் பேச்சுக்களை எவ்வாறு தொடரமுடியும் எனப் பிரச்சினையைத் தோற்றுவிக்க இச்சிறு கட்சிகளுக்கு வாய்ப்பு ஏற்படும். இந்த வகையில் எவராயினும் எந்தவிதத்தில் ஆர்ப்பாட்டங்கள் செய்த போதிலும், அரசியல் சட்ட திட்டங்களுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். ஆனால், தற்போதைய நிலைமையின்படி கொழும்பு உயர்நீதிமன்றத்தால் பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படுமெனத் தோன்றவில்லை. ஆனால், இன்னும் சில மாதங்கள் கழிந்த பின்னர், இவையாவும் பாலைவனத்தில் பெய்த மழை போன்ற நிலை ஏற்படவும் இடமுண்டு. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக வலயமட்ட பண்ணிசைப் போட்டி

மண்டைதீவு,நவ.19

தீவகக் கல்வி வலயத்தின் வலய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் -

கோட்ட மட்ட போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் வலய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் என்றும் -

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-88)

# பிரிவுபசார விழா

கைதடி,நவ.19

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆரம்பகாலந்தொட்டு கணக்காளராகக் கடமை புரிந்து தற்போது ஓய்வுபெற்றுச் செல்லும் ச.நரேந்திரநாதனின் சேவையைப் பாராட்டி நடத்தப்படும் பிரிவுபசார விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் மா. கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

# ஓராண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில் 07 - 01 - 1931

ஆண்டவன் அணைப்பில் 30 - 11 - 2001

## அமரர் ஆறுமுகம் வைரமுத்து

*(முன்னாள் கிளிநொச்சி காணி அபிவிருத்தி உத்தியோகத்தரும், இலங்கை மின்சார சபை லிகிதரும்.)*

**திதி-19.11.2002**

எங்கள் அன்பின் பிறப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!
எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய அப்பாவே!
கார்வடிவில் வந்தானே காராளன்
கதிகலங்கித் தவிக்கின்றோம்!
கண்ணீரில் கரைகின்றோம்
எம் உள்ளம் உள்ளவரை
உங்கள் நினைவுகள் மறையாது
நிலைத்திருக்கும் என்றென்றும்!
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுடனே வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*கீரிமலை வீதி,*
*சித்தன்கேணி.*

(10710)

# Screen Printing

**பரதன் மாஸ்ரர்**

எல்லாப் பொருள்களிலும்
4வர்ணங்களில்
ஸ்கிறீன் பிறின்ரிங் (குறிப்பாக CDகளில்)
பயிற்சிநெறி

ஆரம்பம்: **22-11-2002**

*தொடர்பு:*

**CAREER.COM INSTITUTE**

79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம்:
Mon., Wed., Fri. 10 - 2 மணி
Sat., Sun. 9 - 4 மணி. (10257)

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## வைரமுத்து செல்வராசா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1942-05-04 | 2001-11-30 |

**திதி: 19.11.2002**

ஆண்டொன்றும் ஆயிற்றோ
ஆறவில்லை எம்மிதயம்
மாண்டு நீரும் போனதால்
மனை மாண்பிழந்து போயிற்றே
என்றும் உமது நினைப்பினால்
எம்மிதயம் துடிக்குதே!
இன்று உம்மை நினைத்து நாம்
செலுத்துகிறோம் இதய அஞ்சலி.
*ஆத்மா சாந்தியடைவதாக!*

உங்கள் பிரிவினால் துயருறும்:
மனைவி: செ.நேசமலர்,
பிள்ளைகள்: சீவரத்தினம் -அருள் நிதி (சுவிஸ்),
ரவீந்திரன் - மாலினி (நோர்வே),
வசந்தன்- ஜெகபிரதா (ஆசிரியர்).

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

(10722)

(எமது இல்லத்தில் இன்று நடைபெறும் நினைவு அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளவும்.)

# வலயக் கல்வித் திணைக்களம் - தென்மராட்சி

# கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய என்னால், 05.12.2002ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றையதினம் முற்பகல் 11 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம், விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல. | பாடசாலையும் வேலை விவரமும் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இச்சாட் தரம் |
|---|---|---|---|---|
| 01. | யா/வரணி ம.வி. (30'/25' மாடி கட்டட கீழ் மாடி) | 500.00 | 5,000.00 | M9 |
| 02. | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ('H' மண்டபம் திருத்த வேலை) | 500.00 | 5,000.00 | M9 |
| 03. | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (விஞ்ஞான ஆய்வுகூட திருத்தம்) | 500.00 | 5,000.00 | M9 |

01. மேற்படி வேலைகளுக்கு இச்சாட் தரம் 9உம் அதற்கு மேலுள்ள ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பிக்கலாம்.
02. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 20.11.2002 ஆம் திகதியிலிருந்து 27.11.2002ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை வேலைகள் கிளையில் பாடசாலை வேலை பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
03. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப் பிரதியும் இணைப் பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு கடித உறையின் இடதுபுற மேல் பக்கத்தில் பாடசாலையும் வேலை விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனி கடித உறைகளில் போடப்பட்டு இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு 'தலைவர், கேள்விச் சபை, தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களம், சாவகச்சேரி' என விலாசமிட்டு வலயக் கல்விப் பணிப்பாளரின் அலுவலக அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் 05.12.2002ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்கு பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
04. குறிக்கப்பட்ட வேலைக்குரிய மதிப்பீட்டெண் 'VAT' வரி சேர்க்கப்படாத தொகை VAT வரி சேர்க்கப்பட்ட தொகை என தனியாகக் குறிக்கப்படல்வேண்டும்.
05. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து மூன்று மாத காலத்துக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டு கையளித்தல் வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்கள் இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் பரிசோதகரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலைகள் வேலைகள் கிளை.
வலயக் கல்விப் பணிமனை,
தென்மராட்சி, சாவகச்சேரி.

**வ.செல்வராசா,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

(C/24948)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1928 - 10 - 01

உதிர்வு 2000 - 12 - 12

## திருமதி பூமணி சபாபதி

திதி: 20-11-2002 புதன்

பாலுடன் சேர்த்து பாசம் பகிர்ந்தாய்
அன்புடன் குழைத்து அறிவு தந்தாய்
அன்பான எம் அம்மாவே!
எம்மைப் பிரிந்து - இன்று
ஈராண்டு மறைந்தாலும் - நாம்
ஒருபோதும் மறவோம் அம்மாவை - நீ
என்றும் எம்முடனே வாழ்வாய்!

- கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*"தேவி வாசா"*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

(C/24919)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான விளையாட்டு விழாவில் முத்திரை பதிக்கும் தமிழ் வீரர்கள்

யாழ்ப்பாணம்,நவ.19

வடக்கு, தெற்கு சமாதான விளையாட்டு விழாவில் தமிழ் வீரர் மற்றும் வீராங்கனைகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்று வருகின்றனர். யுத்த அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் பயிற்சி வசதிகள் திருப்திகரமாக கிடைக்காத நிலையிலும் தமது விடாமுயற்சியால் இவர்கள் போட்டியில் வெற்றிபெற்று வருகின்றனர்.

இவ்விழாவின் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை போட்டிகள் ஆரம்பமாகின. இதில் நகர பொது வசதிகள் அமைச்சர் மொஹமட் மஹ்ரூப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:-

**உயரம் பாய்தல் (ஆண்கள்)**

எஸ்.கமலமோகன் (1.90மீ.) யாழ்ப்பாணம், பி.ஜி.அரணலங்கா (1.80மீ.) திருகோணமலை, டி.எம்டிலான் (1.78ம.) களுத்துறை.

**குண்டெறிதல் (ஆண்கள்)**

எம்.பிரதீப்குமார் (11.91) யாழ்ப்பாணம், சுரத்டி.சொய்ஸா (11.67) களுத்துறை, ஆர்.ட.குணவர்த்தன (11.32) களுத்துறை.

**400 மீ. தடை தாண்டல் (பெண்கள்)**

சந்திரிகா பிரியந்தி - களுத்துறை (75.6செக்.), வி.சேந்தனி - யாழ்ப்பாணம் (75.8செக்.), டிலானி - களுத்துறை (80.2செக்.).

**200மீ. தடைதாண்டல் (ஆண்கள்)**

டிபி.ஏ.பி.கயான் - களுத்துறை (56.8 செக்.), எஸ்.பி.சில்வா - களுத்துறை (57செக.), என்.டி.டயஸ் - களுத்துறை (60செக்.).

**நீளம் பாய்தல் (ஆண்கள்)**

ஏ.என்பெர்னாண்டோ - களுத்துறை (6.74மீற்.), கே.ர.ஜி.மலிக்க - களுத்துறை (6.43செக்.), எஸ்.ரஞ்சித்குமார் - யாழ்ப்பாணம் (6.40மீற்.).

## விளையாட்டு

**நீளம் பாய்தல் (பெண்கள்)**

சி.பி.கூரே - களுத்துறை (4.95மற்.), சுபாஷினி ஜெயவீர - களுத்துறை (4.82மீற்.), செல்வி எம்.கனகசிங்கம் - யாழ்ப்பாணம் (4.70மீற்.).

**பரிதி வட்டம் வீசுதல் (பெண்கள்)**

ஐ.எஸ்.லியனகே - திருமலை (22.26மீற்.), ரி.த.போதனா - வவுனியா (22.24மீற்.), டி.எம்.டபிள்யூ குமாரி - அம்பாறை (20.56மீற்).

**800 மீற்றர் (பெண்கள்)**

ஏ.சந்திரகலா மெண்டிஸ் - களுத்துறை (2நிமி.36.1செக்.), வத்சலா மதுபாஷினி - திருமலை (2நிமி.46.2செக்.), எம்.பத்மலதா - களுத்துறை (2நிமி. 50.2செக்.).

**4X400 அஞ்சலோட்டம் (ஆண்கள்)**

களுத்துறை (45.7செக்.), மட்டக்களப்பு (46செக்.), வவுனியா (46.4 செக்.), யாழ்ப்பாணம் (46.9செக்.), அம்பாறை (47.3செக்.), திருகோணமலை (48செக்.).

**4X400மீற்றர் அஞ்சல் ஓட்டம் (பெண்கள்)**

களுத்துறை (55.1செக்.), யாழ்ப்பாணம் (56.4செக்.), அம்பாறை (57.1 செக்.), முல்லைத்தீவு (64.3செக்.), வவுனியா (64.5செக்.). (ஒ-5)

# டெனிஸ் விளையாட்டிலிருந்து சான்செஸ் விகாரியோ ஓய்வு



ஸ்பெயினின் பிரபல டெனிஸ் வீராங்கனை அரண்ட்க்ஷா சான்செஸ் விகாரியோ டென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

1971இல் பிறந்த சான்செஸ் விகாரியோ கடந்த 1985ஆம் ஆண்டில் சர்வதேச டென்னிஸ் உலகினுள் காலடி எடுத்துவைத்தார்.

1989ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற பிரெஞ்ச் பகிரங்க இறுதிப் போட்டியில், ஜேர்மனியைச் சேர்ந்த அப்போது தரப்பட்டியலில் முதல் இடத்தில் இருந்த ஸ்டெபி கிராபைத் தோற்கடித்து பிரெஞ்ச் பகிரங்கப் பட்டத்தைக் கைப்பற்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

"இது ஓய்வுபெறுவதற்கான நேரம், இனிமேல் நான் எனது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். நான ஓய்வுபெறுவதாக எடுத்த இந்த முடிவு எனது தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையிலதான்" என்று அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்தார். (ஒ)

## நட்சத்திரங்களின் உதைபந்தாட்டம்:

# ஹென்றியரசரும், யூனியனும் இணைச் சம்பியன்களாகின

## ஆதரவாளர் கைகலப்பால் இந்த முடிவு

வலி.வடக்கு,நவ.19

நட்சத்திரங்களின் உதைப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, தெல்லிப்பளை யூனின் கல்லூரி என்பன இவ்வாண்டிற்குரிய இணை சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு அபிவிருத்திக் குழு வருடாந்தம் நடத்திவரும் இவ் வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டி நேற்றுமுன்தினம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற இப்போட்டி ஆரம்பம்முதல் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

ஆயிரக்கணக்கான ரசிகர் மத்தியில் இடம்பெற்ற இப்போட்டியில் விளையாட்டு ஆரம்பமாகி ஒரு நிமிட நேரத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினர் கோலடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டனர்.

ஆனாலும் இரு அணிகளும் தொடர்ச்சியாக கோல் அடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இருந்தன. போட்டி ஆரம்பமாகி 18 ஆவது நிமிடத்தில் ஹென்றியரசர் கல்லூரி அணியினர் தமது முதலாவது கோலை அடித்தனர்.

பின்னர் இடைவேளை வரை இரு அணிக்கும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதிலும் அவற்றை கோலாக்கத் தவறினர்.

இந்த நிலையில், இடைவேளையின் பின்னர் யூனியன் கல்லூரி பின்வரிசை வீரர் எதிரணி வீரரை தாக்கிய குற்றத்திற்காக மத்தியஸ்தரினால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டார். ஆனாலும் குறிப்பிட்ட வீரர் மீண்டும் தவறாக விளையாடியதாக கருதப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆதரவாளர்கள் மைதானத்தினுள் புகுந்து கைகலப்பில் ஈடுபட்டனர்.

இதனால் ஆட்டம் முடிவடைய 15 நிமிடம் இருக்கும் நிலையில் விளையாட்டு இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்து போட்டியை நடத்துவதற்கு ஆதரவாளர்களின் கைகலப்பு இடையூறாக இருந்தமையால் போட்டியை இடைநிறுத்தி இரு அணியினரையும் இவ்வருட இணைச் சம்பியனாக தெரிவு செய்வதென போட்டி ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்தனர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கலந்துகொள்ள இருந்த மகாஜனாக் கல்லூரி அணியினர் வருகை தராமையைத் தொடர்ந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு மூன்றாம் இடத்திற்கான பரிசு வழங்கப்பட்டது.

இப்போட்டியின் சிறந்த வீரனாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வலது முன்னனி வீரர் ஸ்ராலின்ராஜ்ஜும், சிறந்த கோல் காப்பாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஜனஸ் கணனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-5-86).

# ஆசிய - உலக அணிகள் பிரிட்டனில் மோதல்

ஆசிய - உலக அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் ஜனவரி 25, 26 ஆம் திகதிகளில் பிரிட்டனில் நடைபெறவுள்ளன.

வேல்ஸ் தலைநகரான கர்டிவ் நகரிலுள்ள மிலேனியம் அரங்கில் விசேட விதிமுறைகளின்படி இப்போட்டிகள் நடைபெறும்.

கடந்த ஒக்ரோபர் மாதம் பிரித்தானிய அணிக்கும் உலக அணிக்குமிடையிலான போட்டிகள் இவ்வரங்கில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் நஸர் ஹுஸைன் தலைமையிலான பிரித்தானிய அணியை ஸ்ரீபன் பிளமிங் தலைமையிலான உலக அணி தோற்கடித்தது.

இம்முறை ஆசிய அணியில் ராகுல திராவிட், அனில் கும்ப்ளே, மொஹமட்கைஃப், வஸிம் அக்ரம், இன்ஸமாம், சொஹைப் அக்தர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

ஸ்ரீபன் பிளமிங் தலைமையிலான உலக அணியில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, ஸிம்பாப்வே, மேற்கிந்திய அணி வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். (ம-5)

## தென்னாபிரிக்க டெஸ்ட்டில்

# திலகரத்னா சாதனை: முரளி முன்னேற்றம்



தென்னாபிரிக்க மண்ணில் டெஸட் சதம் குவித்த முதலாவது இலங்கையர் எனும் பெருமையை ஹசான் திலகரத்ன பெற்றுள்ளார்.

சென்சூரியன் பார்க்கில் நடைபெறும் தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது அவர் இச்சாதனையைப் படைத்தார்.

இதேவேளை, டெஸ்ட் போட்டிகளில் ஆகக் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்தியோர் பட்டியலில் முத்தையா முரளிதரன், கபில்தேவைக் கடநது மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இப்போட்டியின் இரண்டாவது நாளான கடந்த சனிக்கிழமை இலங்கை 323 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஹசான் திலகரத்ன 231 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 104 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் போட்டிகளில் ஹசான் திலகரத்ன பெற்ற 10 ஆவது சதம் இதுவாகும்.

ஹசான், டெஸ்ட் சதத்தைப் பூர்த்திசெய்வதற்குப் பின்வரிசை துடுப்பாட்ட வீரர் முத்தையா முரளிதரன் பக்கபலமாகத் துடுப்பெடுத்தாடினார். 26 பந்து வீச்சுக்களில் ஒரு சிக்ஸர், 5 பௌண்டரிகள் உட்பட 27ஓட்டங்களைப் பெற்றார் முரளி.

10ஆவது விக்கெட்டுக்காக முரளியும் ஹசானும் இணைந்து 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியில் ஸ்ரீவ் எல்வோர்த்தியை ஆட்டமிழக்கச் செய்ததன்மூலம் முரளியின் டெஸ்ட் விக்கெட் எண்ணிக்கை 435 ஆக உயர்ந்தது. இதன் மூலம் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவின் 434 விக்கெட எண்ணிக்கையை முரளி கடந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் கொட்னி வோல்ஸ், ஆஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் ஆகியோர் மாத்திரமே முரளியைவிடக் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களாகத் திகழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# ஒரு நாள் போட்டியில் முரளிதரன் கிடையாது

## குடலிறக்கநோய் காரணமாம்



கேப்டன்,நவ.19

தென்னாபிரிக்க அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரில் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பங்கேற்கமாட்டார். குடல் இறக்க நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அவர் இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென தெரிவுக் குழுத் தலைவர் கை.டி.அல்விஸ தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட்போட்டிகள் நிறைவடைந்ததும் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு அரவிந்த டி சில்வா உட்பட ஆறு புதிய வீரர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதே நேரம் முத்தையா முரளிதரனுக்குப் பதிலாக சகலதுறை ஆட்டக்காரரான திலான் சமரவீரவும், அணித்தலைவர் பதிலாக அதிரடி வீரர் அவிஷ்க குணவர்த்தனாவும் அணியில் இடம் பெற்றுள்ளனர். இவர்களுடன் உபுல் சந்தன, புலஸ்த்தி குணரத்தனா, பிரபாத் நிஸ்ஸங்க ஆகியோரும் இந்த ஒருநாள் போட்டித் தொடருக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அணியின் தலைவர் ஜயசூரிய இரண்டு அல்லது மூன்று ஆட்டங்களில் பங்கேற்கமுடியாத நிலை தோன்றலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், 17பேர் கொண்ட ஒரு நாள் ஆட்ட அணியில் சனத் ஜெயசூரியவும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அணியிலிருந்தே போட்டிக்கான இறுதிப் பதினொரு பேரும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அணியின் விவரம் வருமாறு:-

சனத் ஜெயசூரிய (அணித் தலைவர்), மாவன் அத்தப்பத்து, குமார் சங்கக்கார, ரசல் ஆர்னலட், மஹேல ஜெயவர்த்தன, அரவிந்த டி சில்வா, ஜெஹான் முபாரக், அவிஷ்ஷ குண வர்த்தன, ஹஸந்த பெர்னாண்டோ, உபுல் சந்தன, திலான் சமரவீர, புலஸ்தி குணரத்தின, சமிந்தவாஸ், தில்ஹர பெர்ணாண்டோ, சமில கமகே, பிரபாத் நிஸ்ஸங்க. (ஒ-5)

# நீண்டகால இடைவெளியின் பின் இந்திய அணியில் தமிழக வீரர்கள்

சென்னை,நவ.19

இந்திய கிரிக்கெட் அணியில் தமிழக வீரர்களுக்கு போதிய வாய்ப்புக்கள் தரப்படுவதில்லை என்று தமிழக கிரிக்கெட் ரசிகர்கள் முணுமுணுப்பது வழக்கம். இந்நிலையில் எஸ்.பாலாஜி, முரளி கார்த்திக் என இரு தமிழக வீரர்கள் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இது குறித்து பாலாஜி கூறுகையில்,

"நண்பருடன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒளிபரப்பான செய்திமூலமே நான் அணிக்குத் [illegible] இந்திய அணியில் இடம்பெற வேண்டும் என்ற எனது கனவு நிறைவேறியுள்ளது. எனது சிறப்பான திறமையை வெளிப்படுத்தி தொடர்ந்து அணியில் இடம்பிடிக்க முயற்சிப்பேன்.

"சிரேஷ்ட வீரர்கள் ஸ்ரீநாத, நெகரா ஆகியோருக்கு இணையாக பந்து வீசுவது சவாலான காரியமாகும். கடினமாகப் பாடுபட்டு எனது இடத்தை அணியில் தக்கவைப்பேன். தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை சுற்றுப் பயணம்செய்த இந்திய 'ஏ' அணியில் ஆடியதும் எனக்கு இந்திய அணியில் சிறப்பாக ஆட கைகொடுக்கும் என்று நம்புகிறேன்."

- இவ்வாறு எல்.பாலாஜி கூறினார்.

பாலாஜி அணியில் இடம்பிடித்தது குறித்து அவரது தாயார் மல்லிகா கூறுகையில், "எனது மகன் இவ்வளவு விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. எங்கள் குடும்பமே மகிழ்ச்சியில் திளைக்கிறது" - என்றார்.

இந்திய அணியில் இடம்பிடித்துள்ள தமிழகத்தைச் சேர்ந்த முரளி கார்த்திக் கூறுகையில்,

"இந்திய அணியில் இடம் கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சிறப்பாக விளையாடி தொடர்ந்து அணியில் இடம் பிடிப்பேன்" - என்று நம்பிக்கை தெரிவித்தார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 137 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த

**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையை**
சேர்ந்த மாணவன்

## செல்வன் பத்மநாதன் அஜந்தன்

அவர்களை நாம் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வி. கற்பித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம். அத்துடன், இவர் கல்வியில் மேன்மேலும் சிறப்புப் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம். மேலும் இவருடன் சித்தியடைந்த மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, லண்டன் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அத்தான், அண்ணா, சுவிஸ் மாமா, மாமி, அக்காமார், அத்தான், அக்கா, மாச்சான்மார் (வில்வமடு) சித்தப்பா, அத்தான், அக்கா மற்றும் மாமாமார், மாமிமார்.

*திருநெல்வேலி,*
*பரமேஸ்வராச்சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

(10744)

---

# கண்ணீர்ப் பூக்கள்

சரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள்ளி ஆசிரியை

**திருமதி ஜெயகௌரி விசாகன்**

அவர்களின் பாசமிகு தந்தை

## சின்னத்தம்பி இராசையா

***(இளைப்பாறிய ஆசிரியர்)***

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அபிவிருத்திச் சபையினர்,
மயூரி அம்பாள் முன்பள்ளி, சரசாலை மத்தி.

(C/24954)

---

# மரண அறிவித்தல்

## திருமதி தர்மலிங்கம் சௌந்தரம்

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்.பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் சௌந்தரம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - பார்வதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் துரைராஜா பாஸ்ரர் (கனடா), கனகாம்பாள், அழகராஜா (கனடா) ஆகியோரின் தாயாரும் பரமநாதன் (கொழும்பு), கமலாதேவி, நளினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2002) செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37/11, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
(10751) **T.துரைராஜா பாஸ்ரர் (மகன்)**

---

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.19

இந்துசமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோயில முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5.30 மணிக்கு 'ஆரியம் தமிழோசை ஆனவன்' என்னும் தலைபபில் அகில இலங்கை திருமுறை மனறத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் நிகழ்வுக்கு தலைமை வகிப்பார்.

இதேவேளை - நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாவலர் மணிமண்டபத்தில் கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (எ-4)

## சிறுவர் கலைவிழா

குருநகர்,நவ.19

யாழ்க்கேரி - நல்லூர் வீதியிலுள்ள நல்லூர் ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் இயங்கிவரும் நல்லூர் ஞானக்குழந்தை இல்லத்தின் கலை விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு மடாலயத்தில் பொறுப்பாசிரியை செல்வி க.ஸ்ரீவாணி தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-51)

## ஹற்றன் தோட்ட யுவதி கழுத்து வெட்டிக் கொலை!

கொழும்பு,நவ.19

ஹற்றன், ஸ்டெப்டன் தோட்ட மல்லிகைப்பூ பிரிவைச் சேர்ந்த ஒரு யுவதி நேற்றுக்காலை கொலை செய்யப்பட்டார்.

தோட்டத்திலிருந்து ஹற்றன் நகருக்குச் செல்லும் வழியில் 20 வயதுடைய இந்த யுவதி கொல்லப்பட்டார். தனிப்பட்ட பகை காரணமாக ஒரு வாலிபர் இந்த யுவதியின் கழுத்தை அறுத்துக் கொன்றிருக்கிறார் என்று ஹற்றன் பொலீஸார் தெரிவித்தனர்.

அந்த வாலிபர் அப்பிரதேசத்தில் இருந்து தப்பியோடிவிட்டார் எனவும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன எனவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

---

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து நாகலிங்கம்

சங்கானை, சேச்றோட்டைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து நாகலிங்கம் 13.11.2002 புதன்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் அமரர் சரவணமுத்து - நாகப்பிள்ளையின் புதல்வரும் சிவகாம சுந்தரியின் கணவரும் அமரர் நவரட்ணம் மற்றும் பொன்னையா கனகரத் தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிவத்தின் அன்புத் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேச்றோட்,*
*சங்கானை.*

தகவல்:
ச.பொன்னையா
(சகோதரன்.)

(10742)

## திருமதி தம்பன் செல்லாச்சி

துன்னாலை மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி தம்பன் செல்லாச்சி 16.11.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பன் அவர்களின் அன்பு மனைவியும் அருந்ததியம்மா (மட்டக்களப்பு), செல்லத்துரை, தம்பித்துரை, ஐயாத்துரை, லீலாவதி, ஜெகசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகமுத்து, இராசம்மா, தவமணி, யோகேஸ்வரி, சிவபாதம், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேரண்டை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(10746)

## திருமதி கதிரவேலு காந்தம்மா

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு காந்தம்மா அவர்கள் 17.11.2002 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு (தம்பிப்பிள்ளை) அவர்களின் அன்பு மனைவியும் நாகம்மா (ஆனைக்கோட்டை) அவர்களின் அன்புச் சகோதரியும் கனடாவில் வசிக்கும் S.P.Importers உரிமையாளர்களான செல்லப்பா, பாலசுந்தரம், சிவசாமி, சோமசுந்தரம், கந்தசாமி (பரந்தன் இரசாயனக் கூ.தாபனம்), திருமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்துரை (இடைக்காடு ம.வி.), சத்தியதேவி, வள்ளியம்மை, பத்மலோசனா, வசந்தி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரேணுகாதேவி, செந்தில்நாயகி, றங்கநாதன் (கனடா), ஜானகி, கிருபாநந்தி, கோகுலன், வேணுதாஸ், லோகவேணி, திருவேணி, தனுசன், றனோஜா, அபிநயா, பிரவீணா, சஷானா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சிறுப்பிட்டி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
க.கந்தசாமி (மகன்)
இ.சின்னத்துரை (மருமகன்)

(10736)

---

# 15 ஆவது ஆண்டு நினைவில்....



மலர்வு
13-11-1936

உதிர்வு
04-12-1987

## அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

**(ஸ்தாபகர், அருள் முருகன் நகை அகம்)**

**திதி: 19-11-2002**

*பதினைந்து ஆண்டுகள் பறந்தோடிப் போயினவே*
*கதிகலங்கி நிற்கின்றோம் துடுப்பில்லாப் படகுபோல்!*
*விதிசெய்த சதியினால் எமைப் பிரிந்து சென்றீரோ?*
*மதிமயங்கி வாடுகிறோம் மங்காத ஒளி விளக்கே!*

*483, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
***157/1, சாரங்கா நகைமாடம்,***
*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-24952.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல் திறன், ஆராய்வூக்கம் விஞ்ஞானிகளை உருவாக்கும்!

## உயிரிரசாயனவியல்துறை விரிவுரையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.19

பாடசாலை மட்ட விஞ்ஞான மன்றங்கள்மூலம் தமது கல்வித் தேடல் திறன், ஆராய்வூக்கம் போன்றவற்றை விருத்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த விஞ்ஞானிகளாகத் திகழ்வர்.

- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உயிரிரசாயனவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பொ.நரைத்தினம்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கணித விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞானதின விழா அண்மையில் மன்றத் தலைவர் நி.செந்தூரன் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

கலாநிதி பொ.நவரட்ணம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களிடம், இயல்பாகவேயுள்ள விவேகம், ஆற்றல், ஆராய்வூக்கம் போன்றவற்றை சமூகத்துக்கு நன்மை தரக்கூடிய வகையில் விருத்தி செய்வதற்குரிய சந்தர்ப்பங்கள் விஞ்ஞான மன்றக் கூட்டங்கள், சஞ்சிகைகள், கண்காட்சிகள் போன்றவற்றின் மூலம் ஏற்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டுக்கு நன்மை தரக்கூடிய எதையாவது தாமும் கண்டுபிடிக்கவேண்டும் என்ற உந்துதலை மாணவர்களிடம் ஏற்படுத்தும்.

பாடசாலை மாணவர்கள் பாடநூல்கள் வழியாகக் கற்றுத் தேறுவதில் நாட்டமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு நடைமுறையில் உள்ள கல்வி கற்பித்தல் முறையும், மதிப்பீட்டு முறைகளும் துணைநிற்கின்றன.

நாட்டுக்கு நன்மைதரும் ஏனைய விடயங்களில் மாணவர்களை ஈடுபடுத்திச் செல்வதற்குரிய வழிகாட்டல்கள் வழங்கப்படுவது குறைவு.

புதியனவற்றை அடையவும் பழையனவற்றை திறன் மிகு வழிக்கு மாற்றவும் அல்லது அதற்கு ஈடான வேறொன்றைக் காண்பதற்குமான எண்ணக்கரு உருவாகும் இடமாக கல்விக் கூடங்கள் அமையவேண்டும். ஆக்கத்திறன் மிக்க ஆசிரியர்களுக்கு விவேகமான மாணவர்கள் கிடைப்பதனால் இது சாத்தியப்பட வாய்ப்பு இருக்கின்றது.

இன்றைய விஞ்ஞான உலகில் நிகழும் அறிவியல் விந்தைகளை மாணவர்கள் அறியவும் தொடர்ந்து சிந்திக்கவும் வாய்பேற்படுத்தப்பட வேண்டும்.

நூலகங்களிலுள்ள நூல்கள், சஞ்சிகைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஊடாகவோ அல்லது வேறு தகவல் தொடர்புசாதனங்கள் ஊடாகவோ மாணவர்கள் தேவையானவற்றைத் தொகுத்து தமது கருத்தை விரைவாகவும், விவேகமாகவும் ஏனையோருக்கு எடுத்தியம்பும் திறன் கொண்ட ஆளுமையை வளர்ப்பதற்குக் களம் அமைத்துக்கொடுக்கப் படவேண்டும். இதுவிடயத்தில் மாணவர் மன்றங்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

மேற்படி விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வி வலய விஞ்ஞான பாட சேவைக் கால ஆலோசகர் ச.அருந்தவரத்தினம், கல்லூரி அதிபர் திரு.ந.சிவகடாட்சம் ஆகியோரும் உரையாற்றினர்.

மேற்படி கல்லூரி கணித விஞ்ஞான மன்றத்தினால் கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கணித விஞ்ஞான பொது அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. (எ)

### விவசாயிகள் முறைப்பாடு

இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் தோல்கள் மற்றும் கழிவுப் பொருளகள் என்பனவற்றை சுன்னாகம் கொத்தியாலடி மாயானத்தில் போடப்படுவதற்கு அம்மயானத்திற்கு அருகில் உள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலரிடம் அப்பகுதி விவசாயச் சம்மேளனப் பிரதிநிதி மூலம் அவர்கள் தமது முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர். (ஒ-152)

# தமிழ் இலக்கியக் குழுவின் எழுத்தாளர் கௌரவிப்பு


யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் இலங்கை கலைக்கழகத் தமிழ் இலக்கியக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விழாவில் எழுத்தாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.



ஆங்கிலத்துறை அறிஞர் ஏ.ஜே.கனகரத்தினாவுக்கு முதுபெரும் தமிழ்ப் பேராசிரியர் கலாகீர்த்தி சி.தில்லைநாதன் பொன்னாடை போர்த்துக் கெ ளரவிக்கின்றார்.



முதுபெரும் எழுத்தாளர் கவிஞர் கலாநிதி இ.முருகையனுக்கு துணைவேந்தர் போராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பரிசில் வழங்குகின்றார்.



எழுத்தாளர் மருதூர்க்கொத்தனுக்கு துணைவேந்தர் பேராசிரியா பொ.பாலசுந்தரம்பிள்ளை பரிசில் வழங்குகின்றார்.

# குத்தகை நிலுவைகளை செலுத்துமாறு கோரிக்கை

## வேலணை பிரதேசசபை விடுத்தது

யாழ்ப்பாணம்,நவ.19

வேலணைப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அடங்கும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தமது குத்தகை நிலுவைகளை உடன் செலுத்தவேண்டும் என்று பிரதேச சபை அறிவித்துள்ளது.

குத்தகை நிலுவைகளை இதுவரை செலுத்தத் தவறிய மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கடைத் தொகுதிகள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நிலுவைகள் செலுத்தப்படுவது குறித்துப் பலதடவைகள் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை நிலுவைகளைச் செலுத்துவதற்கான எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இந்நிலையில் இவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன - இவ்வாறு வேலணை பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் அடுத்த மாதம் 31ஆம் திகதிவரை நிலுவைகளைச் செலுத்த முடியும் என்றும் - நிலுவையைச் செலுத்துபவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து விடுபடமுடியும் என்றும் - அவர் மேலும் அறிவித்துள்ளார்.(எ-ரி)

# சுற்றுச்சூழலைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட வீடியோ அழிப்பு!

## சீருடையினரின் உத்தரவால்

வடமராட்சி கிழக்கில் மணற்காடு, குடத்தனை ஆகிய இடங்களின் இயற்கைச் சூழலை பாதுகாப்பது தொடர்பான ஆய்வுக்காக படம்பிடிக்கப்பட்ட ஒளிநாடா சீருடையினரின் கட்டளைப்படி அவர்கள் முன்னிலையிலேயே அழிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை குடத்தனைப் பகுதியிலுள்ள படையினரின் முகாம் ஒன்றில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் சங்கத்தினர் மணற்காடு, குடத்தனை பகுதிகளில் காணப்படும் மணல் மேடுகள், சவுக்கு மரத் தோப்புக்கள் ஆகியவற்றினையும் சில இடங்களில் அவை அழிக்கப்பட்டதினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் வீடியோப் படம் பிடித்தனர். அப்போது சீருடையினர் அவர்களை தமது இடத்துக்கு அழைத்தனர். தங்களது அனுமதி பெறாமல் வீடியோ படம் பிடித்தது தவறு எனவும் கூறி எச்சரித்தனர். அத்துடன் தமது கண்ணெதிரேயே ஒளிநாடவை அழிக்கும் படியும் உத்தரவிட்டனர். இதனையடுத்து ஒளிநாடா அழிக்கப்பட்டது. இதனால் சங்கத்திற்கு 10 ஆயிரம் ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-182)

# தென்னங்கன்று உற்பத்திக்கு வலி. தெற்கில் நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,நவ.19

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்னம் நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நிலம் பிரதேச செயலகத்தினால் இனம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

உடுவில் கமநல கேந்திர நிலையத்திற்கு அருகில் உள்ள அரச காணியில் ஒரு பகுதியை தென்னை நாற்றுமேடை அமைக்கும் திட்டத்துக்கு வழங்க பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

நில அளவையாளரிடம் இருந்து காணிக்கான வரைபடம் கிடைத்தவுடன் தென்னம் நாற்று நடுகைத்திட்டத்திற்கான காணி அளந்து விடப்படும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஒ-152)

# ஆணவ இருளினைப் பொசுக்கி ஞானச் சோதி ஒளிரவைப்போம்

## இன்று திருக்கார்த்திகைத் தீபநாள்

**யாமே** பிரமம்... யாமே பிரமம் என்று தம்முள் வாதிட்டுப் போர் புரிந்த பிரம விட்டுணுக்களின் செருக்கை அடக்கச் சிவபிரான் சோதி வடிவாகத் தோன்றியது கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் கூடிய தினத்தில் ஆகும்.

இருவர் நடுவில் வானளாவக் கிளர்ந்து நின்ற அனற் பிழம்பைக் காண்ணுற்ற பிரமனும், விட்டுணுவும் அச்சம் கொண்டனர். அக்கியின் வெப்பம் உடலையும் உள்ளத்தையும் சுட்டது. சோதியின் பிரமை கண்களை உறுத்தியது. கலங்கிய மனங்களுடன் கண்களை மூடிய பிரமனும் விட்டுணுவும் தம்மிலும் மேலான ஒரு பொருள் உண்டு என்பதை உணர்ந்து தெளிவுபெற்றுச் சோதியைத்துதித்தனர்.

சோதியின் நடுவே தோன்றிய சிவமூர்த்தி "பிரம விட்டுணுக்களே! கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளிலே இது போன்ற 'சோதி காட்டும்வோம். அதனை வழிபடுபவர்கள் யாவர் ஆயினும், அஞ்ஞான இருளில் இருந்து விடுதலை அடைந்து, மெஞ்ஞான ஒளி பெற்று நமது திருவடி வந்து சேர்வர்" என்று அருள் புரிந்தார்.

அன்று சோதியாகத் தோன்றிய அக்கினிப் பிழம்பு குறுகி இன்று குன்றாகக் காட்சியளிக்கிறது. சிவபிரான் அயனையும் அரியையும் செருக்கு அடக்கி ஆண்டு அருள் புரிந்த இடம் திருவண்ணாமலை. திருவண்ணாமலை பஞ்சபூதத்தலங்களில் தேயு (அக்கினி)த்தலம். இங்கு சிவபிரான் தேயுலிங்கமாக அமர்ந்து அருள் பாலிக்கிறார்.

கார்த்திகையின் கார்த்திகையில் மலை உச்சியில் ஏற்றப்படும் ஒளி "திருக்கார்த்திகைத் தீபம்" என்று தமிழ் நாட்டவரால் போற்றி வழிபடப்படுகிறது.



திருவண்ணாமலைக்கு "சோணாசலம்" என்ற பெயரும் "சோணாசல புராணம்" என்ற நூலும் உண்டு.

ஈழநாட்டில் இந்துக்கள் இத்தினத்தை விளக்கீடு என்று அழைத்து, வீடுகளிலும் ஆலயங்களிலும் விளக்குகளை ஏற்றி இறைவனை ஒளி வடிவில் கண்டு, விசேட வழிபாடுகள் செய்து மனநிறைவு பெறுகின்றனர்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி...", மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே...", "தொடக்கெல்லாம் அறுத்த நற்சோதி", "மின்ஆர் உருவவிகிர்தா போற்றி" என்றெல்லாம் விழித்துத் துதித்த பேரருளாளரின் பாடல்கள் இறைவனைச் சோதி உருவில் கண்டனர் என்பதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றன.

### குமாராலய தீபம

சரவணப்பொய்கையில், சூரசம்ஹாரத்தின் பொருட்டு அவதாரம் செய்த முருகனுக்குப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தனர் கார்த்திகைப் பெண்கள். அவர்களை நினைவுகூரும் வகையில் முருகனுக்குக் "கார்த்திகேயன்" என்ற திருநாமத்தையும் கார்த்திகை நட்சத்திரத்தில் அவனை வழிபாடு செய்பவர்களுக்கு இகபர நலன்களை நல்குவோம் என்றும் அருள்புரிந்தார் சிவபிரான்.

இதனால் கார்த்திகையின் கார்த்திகை நாள் மேலான சிறப்பைப் பெறுகிறது. இந்தத் தினத்தில் தேன் விட்டுப் பிசைந்த தினை மாவில் அகல் செய்து, திரியிட்டு நெய் ஊற்றி; ஒளி கூட்டி முருகனை வழிபாடு செய்யும் மரபை முருகன் அடியார்கள் இன்றும் கடைப்பிக்கின்றனர். இவ்வாறு தீபம் இட்ட அகல் "மாவிளக்கு" என்று அழைக்கப்படுகிறது. இறை மருந்தாக இதை உண்பதால் உடல் நோய்கள் பல அகலும் என்ற நம்பிக்கையும் நம்மவர்களிடையே நிலவுகின்றது.

**மூளாய் அருணாசலம்**

மனதில் மண்டிக் கிடக்கும் ஆணவ இருளைப் பொசுக்கி ஞான ஒளியை நாட்டவல்ல திருக்கார்த்திகைக்கு தீப ஒளியைப் போற்றி வணங்கி மன அமைதியும் ஆன்ம ஈடேற்றமும் பெறுவோமாக. ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Panasonic VVSJ (200) டெக்(Deck) விற்பனைக்குண்டு. தொடர்பு:- தி.செந்தூரன், 72/29, பனிக்கர்வளவு திருநெல்வேலி. T.P:- 0777 110093 கிழமை நாள்கள் எந் நேரமும் சனி,ஞாயிறு பி.ப3.00- மாலை 7வரை பார்வையிடலாம். (10619)

டோமன் பிஞ்சர் நாய்க்குட்டிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.6, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ண பாட சாலை பின் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (தொடர்பு நேரம்: காலை 11-12.30 வரை மாலை 4.00 - 6.00 வரை) (10688)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய் வீதியில் போமன் சடாச்சரமூர்த்தியின் இல்லதிற்கு அருகில் 51/3 பரப்புக் காணி விற்பனைக்கு• உண்டு. தொடர்பு: விமலாஸ், சாவகச்சேரி. (10723)

## கோழிநோய் தடுப்பு மருந்து

Gampura, Raniket மருந்துகள ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8 மணிக்கும் CRD சளி மருந்து புதன்கிழமை காலையும் வழங்கப்படும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10547)

## விவசாயக் குழுக் கூட்டங்கள்

காரைநகர்,நவ.19

ஊர்காவற்றுறைப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-73)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, தென்னை அபிவிருத்தி, பனை அபிவிருத்தி, பட்டினிக்கு எதிரான திட்டம், சீடாத்திட்டம், நியாப, கெயர்திட்டங்கள், உணவு உற்பத்தி திட்டம் ஆகியவைபற்றி ஆராயப்படவுள்ளது. (ஒ-5)

## கல்விக்கழக நடுவப் பணியகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவ.19

தமிழீழ கல்விக் கழகத்தின் நடுவப் பணியகம் இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து இந்த நடுவப் பணியகத்தில் வடக்கு-கிழக்கு கல்வி அபிவிருத்தி திட்டங்கள் தொடா பான இரண்டு நாள்கள் விசேட மாநாடு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.(ஒ-10)

## பிரான்ஸ் தூதரகக் குழு இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், நவ.19

இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு இன்று இங்கு வருகிறது.

இன்று காலை வருகை தரும் இக்குழுவினர் முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி பிரதேசத்திற்கும் இக்குழுவினர் சென்று பார்வையிடவுள்ளனர். (ஒ-10)

## சேவைக்கால ஆலோசகருக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். கல்வி வலயத்தின் சகல சேவைக்கால ஆலோசகர்களுக்குமான விசேட செயலமர்வு ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் படிவம் மற்றும் ஒ.எம்.ஆர்படிவம் ஆகியன நிரப்புவது தொடர்பாக இச்செயலமர்வு இடம்பெறவுள்ள தால சகல சேவைக்கால ஆலோசகர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-10)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1916 ✦ 11 ✦ 19



உதிர்வு 2001 ✦ 11 ✦ 30

### அமரர் சிதம்பரப்பிள்ளை கந்தர் சின்னத்தம்பி

நாளும் பொழுதும் நமக்காக வாழ்ந்தீர்கள்!
நன்மை பல நமக்களித்து நல்லோராய் மிளிர்ந்தீர்கள்
எங்களுயிர் அப்பாவே! உமைக் காண்பதெப்போ?
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகன், உறவினர்.

*செட்டித்தெரு, நல்லூர்.* (10737)

---

## 31ஆம் நாள் விழிநீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்

இகம் 22 - 08 - 1947



பரம் 20 - 10 - 2002

### அமரர் செல்லர் கணேஷ் *(ஆட்டோக்கிளி)*

அன்போடும் பண்போடும் ஆதரவு மொழிபேசி
எம்மோடு வாழ்ந்த நாள்கள் நெஞ்சில் நெருட
இன்றோடு முப்பத்தொன்றுமாயிற்றோ எமைப்பிரிந்து?
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வழுத்துகின்றோம்.

20.10.2002 ஞாயிற்றுக்கிழமை கட்டப்பிராயில் இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்தும், உள்ளூர், வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவியவர்களுக்கும் துன்பத்தின் மத்தியிலும் ஆழ்ந்த நன்றி நவிலலைத் தெரிவிப்பதோடு, இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய்.* (10740)

---

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

நெஞ்சம் மகிழ 1995 - 04 - 27



நெஞ்சம் நெகிழ 1999 - 11 - 22

### செல்வன் தேவராசா நிவேதன்

திதி: 19.11.2002

நாலாண்டாய் நிமலனவன்
நமக்களித்த நம் நிவேதா!
உன் பால் வடியும் பூமுகம்
மனக்கண்ணில் நிற்குதடா
உன் கள்ளமில்லாப் பேச்சு
செவிவழியே ஒலிக்குதடா
உன் களங்கமில்லாச் சிரிப்பு
வாட்டி வதைக்குதடா
உன்னை இப்பாரினில் இனி நாம்
காண்பது எப்போதடா?
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அம்மா,

*வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (10741)

---

## மீன்பிடி வள்ளம் விற்பனைக்குண்டு

32 அடி நீளம், தும்புக் கண்ணாடி இழை H.R.41 H.P லிஸ்டர் இயந்திரம் (ஸ்ரான்டட்தரம்) கொண்ட மீன்பிடி வள்ளம் விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*

**வ.நவரத்தினம்,**
இன்பருட்டி, பருத்தித்துறை. (10735)

---

## உடுவிற் கல்விக்கோட்டம்

# சைவத் திருமுறை விழாவும் பரிசளிப்பு வைபவமும் - 2002

*இடம்:* யா/இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபம்
*காலம்:* இன்று (19.11.2002) செவ்வாய் மு.ப. 8.00 மணி.
*தலைவர்:* திரு.அ.தற்பரானந்தன் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - உடுவிற் கல்விக் கோட்டம்)

### நிகழ்ச்சி நிரல்

காலை 8.00 மணி: இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலில் பூசையும் வழிபாடும் இடம்பெற்று திருமுறைச் சுவடிகளும், சமயக் குரவர் நால்வரினதும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களினதும் திருவுருவப்படங்களும் வீதியுலா வந்து விழாமண்டபத்தை அடைதல்.

காலை 9.00 மணி: பஞ்சபுராணம் ஓதுதலுடன் விழா ஆரம்பம்.

வரவேற்புரை: திரு.துரை எங்கரசு
*(அதிபர் யா/இணுவில் மத்திய கல்லூரி)*

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
*(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு சந்நிதான முதல்வர்)*
சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள்
*(பிரதமகுரு, ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில் - இணுவில்)*

சிறப்புரைகள்: "திருமுறைச் செல்வம்" என்னும் பொருளில்
சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்
*(உதவிப் பணிப்பாளர், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு - யாழ்.பிராந்தியம்)*
"இந்துசமய சீர்திருத்தச் சிந்தனைகள்" என்னும் பொருளில்
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்
*(ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்)*

சைவத்திருமுறை விழாச் சிறப்புமலர் வெளியீட்டுரை:
பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா அவர்கள்
*(தலைவர், கல்வியியற்றுறை, நுண்கலைப் பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்)*

முதற்பிரதி பெறுபவர்: திரு.நா.துஷ்யந்தன்
*(உப அதிபர், யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை)*

✪ மாணவர்களின் சமய நிகழ்ச்சிகள்
✪ சைவநெறிப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்குதல்.

நன்றியுரை: திரு.திருச்சி நவரத்தினம்
*(செயலர், சைவநெறிக்குழு, உடுவிற் கோட்டம்)*

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

*உடுவிற் கல்விக் கோட்டம், சுன்னாகம்.* - சைவநெறிக்குழு -

*அன்பளிப்பு:-*

**கற்பகம் தொலைத் தொடர்பகம்**
*குமாரசுவாமிப் புலவர் வீதி, சுன்னாகம்.*
உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்புகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்.
உள்ளூர்: 070-212251 வெளியூர்:0094-70-212251
(சி-24964)

---

## ஓராண்டு நினைவலைகள்



அமரர்
### ஐயாமுத்து விசாகப்பெருமாள்
*(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)*

மனம் மகிழ 1942.10.12 மனம் நெகிழ 2001.11.29

*அன்புக்கு அகல்விளக்காய்*
*இருந்தீரே எம்மோடு*
*ஆண்டொன்று சென்றும்*
*அழியவில்லை உம்நினைவு*
*ஆண்டாண்டு சென்றாலும்*
*அழியாது எம் மனதில்!*

- குடும்பத்தினர்.

*நாகேஸ்வரி வீதி, சுன்னாகம்.* (10738)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி தி.நாகேந்திரன்** அவர்களது அன்புத் தாயார்

## இராசரத்தினம் பொன்னம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (10743) அதிபர், ஆசியர்கள், ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு.....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளால் நியமிக்கப்படும் ஒருவர் இருப்பார். யாரை அந்தப் பதவியில் நியமிப்பது என்று இன்னமும் முடிவு செய்யவில்லை. விரைவில் அதுபற்றி அறிவிப்போம.

இந்த உபகுழுவில் இரு பிரதிப் பணிப்பாளர்கள் இருப்பர். அவர்களில் ஒருவர் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவார். மற்றவர் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்.

**3 முக்கிய விடயங்கள்**

இந்தக் கலந்துரையாடலில் மூன்று விடயங்களை முதன்மைப்படுத்தி, முன்னுரிமைப்படுத்தி எடுத்துக்கூறினோம்.

ஒன்று மக்கள் மீள்குடியமர்வுக்கு தடையாக உள்ள கண்ணிவெடிகளை அகற்றுதல், இரண்டாவது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் மறுவாழ்வு மூன்றாவது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டங்கள். இந்த மூன்று விடயங்களையும் விரிவாக ஆராய்ந்து அவற்றுக்கான திட்டங்களை வகுத்து ஒஸ்லோ மாநாட்டில் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்துள்ளோம்.

**ஜப்பானியர் பிரசன்னம்**

கடந்த காலங்களில் சிறீலங்கா அரசுக்கு ஜப்பான் பெரியளவில் உதவிகளை வழங்கிவந்தது. தற்போது வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையில் இந்தப் பிரதேசத்துக்கு பெரிய அளவில் உதவிகளை வழங்க ஜப்பான் அரசு முன்வந்துள்ளது.

அந்தவகையில் ஜப்பான் அரசு சமாதான முன்னெடுப்புகளிலும் வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்பி மக்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் பங்குகொள்ள விரும்புகின்றது. அதனாலேயே நேற்றைய சந்திப்பில் ஜப்பானியப் பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள்.

**மீள்குடியமர்வு**

இந்த உப குழுவின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்று இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடிமர்த்துவதாகும். இது உபகுழுவின் முக்கியமான - முதன்மையான வேலைத் திட்டமும் ஆகும்.

இதற்கு வசதியாக இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ள நிலப் பகுதிகளை விட்டு அது அகலவேண்டியது கட்டாயமானதாகும். உயர் பாதுகாப்பு வலயம் என்றும், பாதுகாப்புக்கு முக்கியமென்றும் கூறி மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் இன்னமும் இராணுவம் இருக்கின்றது. அந்தப் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறி மக்கள் அங்கு மீளக்குடியமர்வதற்கு இடமளிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

இந்த விடயம் சகல தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. எனவே இனி இராணுவத் தரப்புத்தான் இதற்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். இதற்கான முழுப் பொறுப்பும் இராணுவத்தரப்பிடமும் அரசுத் தரப்பிடமுமே உள்ளன என்பதை மறுக்கமுடியாது.

இந்த விடயத்தில் தற்சமயம் இழுபறி நிலை ஏற்பட்டாலும் விரைவில் நல்லமுடிவை அரசும் படைத் தரப்பும் எடுக்கும் என நம்புகின்றோம்.

குடாநாட்டில் பெருமளவு மக்களின் குடியிருப்புக்களில், அவர்களின் நிலங்களில் இருந்து படையினர் இன்னமும் வெளியேறவில்லை என்பதும்-

இடம்பெயர்ந்த மக்கள் அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் இன்னமும் அவல வாழ்க்கை வாழுகிறார்கள் என்பதும்-சர்வதேச சமூகத்துக்குத் தெரியும். இத்தகைய நிலை மாறும்போதுதான் இயல்பு நிலை ஏற்படும். இயல்பு நிலையைக் கொண்டுவர உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து படையினரை விலக்கவேண்டிய பொறுப்பு இராணுவத்துக்கும் அரச தரப்புக்கும் உள்ளது. அது விரைவில நிறைவேறியே ஆகவேண்டும். இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அரச தரப்புடன் பேசி இணக்கம் கண்டுள்ளோம். அந்த விடயங்கள் நடைமுறையில் வரும்போது தான் மக்கள் மத்தியில் சமாதான முயற்சிகள் குறித்து நம்பிக்கை ஏற்படும். அதுவரை மக்கள் பொறுத்திருக்கவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் முழுப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள் நிச்சயம் நிறைவேற்றப்படவேண்டும் என்பது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியும். இணக்கம் கண்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதில் இருந்து எவரும் விலக முடியாது.

**நெடுந்தீவுச் சம்பவம்**

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் தரையிறக்கப்பட்டமை யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எதிரானதாகும். சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட நடவடிக்கையாகவே கருதுகின்றோம்.

மக்களின் விருப்பம் இன்றி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும்போது - ஒரு தரையிறக்கம்போல, படையினரைக் கொண்டு சென்று தரையிறங்கியது போலவே - ஈ.பி.டி.பியினரை நெடுந்தீவில் இறக்கியுள்ளது கடற்படை யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு விரோதமான மக்களின் விரும்பத்துக்கு மாறான வீதத்தில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்த அரசும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மக்களின் விருப்பத்துக்கு மாறாக இறக்கப்பட்ட ஈ.பி.டி.பியினரை கண்டிப்பாக வெளியேற்றவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. இது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம் - என்றார் அவர் (ம-3-8-9)

---

## ஓராண்டின் நெஞ்சகலா நினைவில்...



அமரர்

**சபாபதி வரதராசா**

(ஒப்பிலா - காரைநகர்)

அன்னை மடியில் 30-11-1944 | ஆண்டவன் அடியில் 30-11-2001

**திதி : 19.11.2002**

அன்பும் அறமும் அறிவின் திறனும்
என்றும் எமக்கு அளித்த தெய்வமே!
இன்று ஓராண்டு போயினும்
என்றும் உங்கள் நினைவுகள் நிலைக்கும்.

*இல.159, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10756)

*உங்கள் நினைவால் வாடும்:*
**மனைவி மற்றும் உறவினர்கள்.**

---

## 5ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மலர்வு 18 - 11 - 1924



உதிர்வு 13 - 12 - 1997

**அமரர் வை.வல்லிபுரம்**

உரும்பிராய் வடக்கு

**திதி : 19.11.2002**

குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எம் பாசத்தின் உறைவிடமே!
எம் பண்பின் சிகரமே!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறையும்
தெய்வத்துள் ஒன்றான ஐயாவே!
வையத்துள் நாம் வாழும் வரை - நீங்கள்
தெய்வமாய் வழிகாட்டி நிற்பீர்கள்.

தகவல்:
துரைராஜா குடும்பத்தினர்
புதுக்குடியிருப்பு. (10759)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவுகள்.

---

## துயர் பகிர்கின்றேன்

உற்ற நண்பன்

**நாகலிங்கம் கந்தசாமி**

அவர்களின் பிரிவினைக் கேள்வியுற்று
அதிர்ச்சியடைந்தேன். அவரது பிரிவால் துயருறும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*தேவாலய வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (10758)

நண்பன்
**இ.நடராஜா,**
(இளைப்பாறிய பொறியியலாளர்)

---

## சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான அறிவித்தல்

**புங்குடுதீவு - நயினாதீவு**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த எமது சங்கத்தன் பொதுக்கூட்டம் போக்குவரத்து நெருக்கடி காரணமாக இன்று நடைபெறமாட்டாது என்பதையும், கூட்டம் நடைபெறும் திகதி சகல உறுப்பினர்களுக்கும் பின்னர் அறியத்தரப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

தலைவர் (C/24966) செயலாளர்

---

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை
**செல்வி சிவகௌரி** அவர்களின்
அன்புத் தந்தையார், ஓய்வுபெற்ற ஆசிரியர்
**சி.இராசையா**

அவர்கள் காலமாகியதையிட்டு அவர்களின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு, அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,*
*சாவகச்சேரி.* (C/24967)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

---

## ஆத்மார்த்த அஞ்சலி

கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை வீதியைச்
சேர்ந்தவரும் கொழும்பில் வசித்தவரும்,
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆல்ய திருப்பணிச் சபை
உறுப்பினரும், மேற்படி ஆலய திருப்பணிச் செயற்பாடுகளில்
முன்நின்று தொண்டாற்றியவருமாகிய

**நாகலிங்கம் கந்தசாமி**

அவர்கள் 18.11.2002 இல் முருகனடி சேர்ந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது
ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகனை
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெறுநர்
**வே.நடராஜா**
(10757)

**த.கணேசபிள்ளை**
தலைவர், மஞ்சவனப்பதி
முருகன் ஆலய நிர்வாக சபை.

---

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு - குணநாயகம் (M.G.M.)

(பிரபல வைத்தியர்)
(தலைவர், பெரியதம்பிரான் ஆலயம், காரைநகர்)

காரைநகர், சந்தம்புளியடியைச் சேர்ந்த முருகேசு குணநாயகம் அவர்கள் நேற்று (18.11.2002) திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் காலமானார்.

அன்னார் றோசமலரின் அன்புக் கணவரும் கௌசிகா, ரவிசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான முருகேசு - நல்லம்மா தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் இரத்தினசபாபதி, அம்பிகாபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகமலர், சந்திரவதனி, தங்கராணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சீனியர் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் இலக்கம் 75/1, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் தற்காலிக முகவரியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*75/1, கோவில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (C/24956)

தகவல்:
மனைவி : றோசமலர் குணநாயகம்
மகன் : குணநாயகம் ரவிசங்கர்
பெறாமகன : பாலசிங்கம் அருளானந்தம்

## திருமதி ஜெயராசா பர்மராணி

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டு புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராசா பர்மராணி அவர்கள் நேற்று (18.11.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.ஜெயராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை ஆகியோரின் ஏகபுத்திரியும் திருமதி வானதி நவரட்ணசிங்கம் (லண்டன்), திருமதி வான்மதி குணசேகரம், வான்நிலா, ஜெயவர்மன் (லண்டன்), உதயவர்மன், குபேரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை உடையார்கட்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'திருத்தணி',*
*அல்வாய் வடக்கு.* (C/24957)

தகவல்
மு.நவநீதன்
(சகோதரன்)

## செல்லையா துரைராசா

தாவடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா துரைராசா கடந்த 17.11.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அனனார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செல்லையா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி துரையப்பா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் சகோதரரும் மற்றும் சந்திரசேகரம் (பிரான்ஸ்), சந்திராதேவி, சாரதாதேவி, நிர்மலாதேவி (பிரான்ஸ்), சந்திரகுமாரி(பிரான்ஸ்), ஜெயசுதா(லண்டன்), தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசக்திமலர், இராமச்சந்திரன், அருணாசலம், கனகலிங்கம், இராசேந்திரம், கேசவன் ஆகியோரின் மாமனாரும் அபிரா, அபிசன், அனுசன், மசோதன், மேகலா, டயானி, துவாரகா, பிரியங்கா, உஷாந்தினி, இராகவன், சீதா, இராகுலன், சங்கீத், சங்கவி, இராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் இராசையா, சிவக்கொழுந்து, இராசம்மா, இலட்சுமி, தங்கம்மா, நாகம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2002) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (10760)

தகவல்:
சந்திரசேகரம் (மகன் -பிரான்ஸ்)
இராமச்சந்திரன் (அத்தான்)

## சங்கரப்பிள்ளை நவரத்தினம்

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை - நவரத்தினம் நேற்று (18.11.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னதங்கத்தின் அன்பு கணவரும், தம்பிராசா (U.K) காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சின்னத்துரை, கனகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அனனாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் வடக்கில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரான்பத்தை,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (C/24958)

தகவல்:-
பொ.கதிர்காமநாதன்
(மருமகன்)
யா/தொழில்நுட்பக் கல்லூரி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களைத் திறக்கமறுத்தால் விரைவில் அஹிம்சைப் போராட்டம்

## இந்து சமயப் பேரவை தீர்மானம்

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களில் பூசை வழிபாடு இன்றி கைவிடப்பட்டுக் கிடக்கும் 422 இந்து ஆலயங்களையும் எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதிக்குள் மீளத்திறந்து பூஜை வழிபாடுகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும். இல்லையேல் ஆலயங்களைத் திறக்கக்கோரி இந்து மக்கள் திரண்டு அஹிம்சைப் போராட்டங்களை நடத்தும் நிலை ஏற்படும்.

இவ்வாறு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது யாழ்ப்பாணம் இந்துசமயப்பேரவை.

'இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் எதிர்கொள்ளும் சமகாலப்பிரச்சினைகள்' என்ற விடயம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று இந்துசமயப் பேரவையின் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்தக் கலந்துரையடலிலேயே மேற்கொண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்துசமயப் பேரவைத்தலைவர் சீ.விநாசித்தம்பி கலந்துரையாடலுக்கு தலைமை வகித்தார். யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மாவட்டபுரம் கந்தசுாமி கோவில் ஆதீன கர்த்தா ஷண்முகநாதக்குருக்கள் ஆகியோரும் இந்து ஆலயங்களின் நிர்வாக சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

### ஒன்றுகூடுமாறு கோரிக்கை

நெடுந்தீவில் தரையிறங்கியுள்ள ஈ.பி.டி.பியினரை அங்கிருந்து அவர்களை வெளியேறக் கோரி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர் கையளிக்கப்படவிருப்பதனால் சகல பொது அமைப்புக்களின் தலைவர், செயலாளர்களை இன்று காலை 9.45மணிக்கு தமிழீழ மாணவர் பேரவையில் ஒன்றுகூடுமாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ம)

புதிய வகுப்புகள் ஆரம்பம்
பதிவுகளுக்கு முந்துங்கள்
25.11.2002
Dip. In MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Video Mixing
Internet & email
baby dod com
(சிறுவர்களுக்கானது)
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna TP: 021-2222674

இதோ உங்கள் வாழ்க்கைக் கனவுகளை கையகப்படுத்திக் கொள்ளுங்கள்

உலகத் தரம் வாய்ந்த IBM, Compaq நிறுவனங்களின் PI, PII கணனிகள் உங்களிற்காகவே யாழ் மண்ணில்
ரூபாய் 10,000/= லிருந்து
முதல் கையிருப்பிற்கு 6 மாத உத்தரவாதம்
For further details
STP Your Partner in IT Solutions
T.P 2222674 54A, Palaly Road, Kantharmadam

### அவசர கலந்துரையாடல்

இராமநாதன் நுண்கலைக் கழக அனைத்து வருட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை (20.11.2002) புதன்கிழமை காலை 10 மணிக்கு நுண்கலை வளாகத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரும் தவறாது சமுகந்தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

- மாணவர் பிரதிநிதி.

(10752)

1936இல் இருந்து
சிறந்த சேவையில்
தெளிவான விரைவான புகைப்பட சேவையில்
அனுபவம்மிக்கவர்களான
குகன் ஸ்ரூடியோ நிறுவனத்தினர்
Kodak Mini Lab
Quality Monitoring Service from Kodak

திறப்பு விழா
19-11-2002
செவ்வாய்க்கிழமை
காலை
11.12 - 12.42
வரையுள்ள சுபவேளையில்
ஆரம்பிக்கின்றோம்
என்பதனை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

KUGAN STUDIO & COLOUR LAB
குகன் ஸ்ரூடியோ & கலர் லாப்
POINTPEDRO பருத்தித்துறை.
Est... 1936
(10697)

### மாணவர் கௌரவிப்பு

குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் நடத்தும் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவும் மாணவர் கௌரவிப்பு வைபவமும் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு குருநகர் கலையரங்கில் நடைபெறும். (ஐ-51)

### தீவகத்தில்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்திருந்தால் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள ஈ.பி.டி.பியினருக்கு எதிராகவும் அவர்களைத் தூண்டிவிட்டிருக்க முடியும். அதை விடுத்து நெடுந்தீவில் மட்டும் மக்களைத் தூண்டிவிடவேண்டிய தேவை எமக்கு எதுவும் இல்லை.

எமது அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அண்மையில் தாய்லாந்தில் வைத்து மாற்றுக் கட்சிகள் வடக்கு-கிழக்கில் செயற்பட இடமளிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அப்படியே நாமும் செயற்பட்டு வருகின்றோம் என்றார் இளம்பரிதி. (ஐ-17)

### சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவை மீண்டும் வெளியிட்டிருக்கிறார்.

அந்த வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி "அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான போர் நிறுத்தம் இரு தரப்பினதும் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் குறிக்கோளுடன் செய்யபபட்டதொன்றாகும். ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக கட்டமைப்பின் கீழ் சிங்கள், தமிழ், முஸ்லிம் மக்களின் சாதாரண அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகள் ஆரம்பமாகியிருக்கின்றன. இச்செயற்பாடுகளின் வெற்றிக்காக நான் மனப்பூர்வமாக என்னை ஈடுபடுத்தியிருக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சில தினங்களுக்கு முன்னர் அறிவித்த நிலைப்பாட்டுக்கு ஜனாதிபதியின் இந்த நிலைப்பாடு முற்றிலும் மாறானது என்று அந்த வெளிநாட்டு செய்தி நிறுவனம் கூறுகின்றது.

அரசின் சமாதான முயற்சியையும் நோர்வேயின் அனுசரணையையும் பொ.ஐ.முன்னணி கடந்த வெள்ளிக்கிழமை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில கண்டித்தது தெரிந்ததே.(ம)

மிகச் சொற்ப பிரதிகளே!
G.C.E.O/L 2002 Dec.
எதிர்ப்பார்க்கையுடனான
5 பாட மாதிரிவினாத்தாள்கள்
விடைகளுடன்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், ரூபன் - யாழ், துர்க்கா - சுன்னாகம், நாவலர் -புலோலி, பிரியங்கா - பருத்தி., அறிவமுது, பிள்ளையார் - வன்னி, கவிதா - வவுனியா.
(10705)

# செங்கலடியில் இளைஞர் கைது!

கொழும்பு,நவ.19

செங்கலடி இராணுவமுகாம் அருகே நடமாடிய ஓர் இளைஞர் ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். அவரிடம் இரண்டு கைக்குண்டுகளும் ஒரு கிளைமோர் குண்டும் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடி, குமாரவேலி பிரதேசத்தைச் சேர்ந்த இவர் நேற்றுமுன்தினம் இரவு 7மணியளவில் கைது செய்யப்பட்டார். அவர் புலிகள் இயக்க உறுப்பினர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

### வவுனியா உப குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லஷ்மன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி மேஜர் விடுதலை மற்றும் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த தயா மாஸ்ரர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அரசதரப்புப் பிரதிநிதிகளாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, ரியர் அட்மிரல் வீரசேகர, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மஜீத் ஆகியோருடன் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், வவுனியா மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கேதீஸ்வரன், வவுனியா தமிழ் பிரதேசச் செயலாளர் எஸ்.சத்தியசீலன், செட்டிகுளம் பிரதேச செயலாளர் செல்வி சுகந்தி துரைசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட மக்களின் பிரச்சினை தொடர்பாகவும் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும கலந்துரையாடப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருணாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக முதலில் பேசப்பட்டது.

எனினும் இந்தப்பிரதேசங்கள் இராணுவ ரீதியில் திருகோணமலை மாவட்டப் பிரிவுக்கு உட்படுத்தப்பட்டது என்றும் இது தொடர்பாக எதிர்வரும் 21ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள உபகுழுக்கூட்டத்தில் கலந்துரையாடலாம் என்றும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள அதியுயர் பாதுகாப்புப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும் பேசப்பட்டது. வவுனியாப் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து அறுநூறு மீற்றருக்கு அப்பால் மக்கள் மீளக்குடியமர முடியுமென்று இராணுவத்தினரால் கூறப்பட்டது.

இது தொடர்பான ஏற்பாடுகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வசதியாக இராணுவம் - புலிகள் - அரச அதிகாரிகள் கொண்ட உபகுழு ஒன்று நேற்று நியமிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்திலுள்ள பொதுக்கட்டடங்களிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றுவது குறித்தும் பேசப்பட்டது.

உடனடியாக இராணுவத்தினரை வெளியேற்றும் சாத்தியம் இல்லை என்றும் மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசிடம் போதிய நிதி இல்லை என்றும் இராணுவத் தரப்பில் கூறப்பட்டது.

எனினும் எதிர்வரும் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தரப்புக்கு தலைமை வகித்த மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தெரிவித்தார்.

நேற்றைய கூட்டம் தொடர்பாக கேணல் ஜெயம் கூறியதாவது:-

பல எதிர்பார்ப்புக்களுடன் வந்தோம் எனினும் எந்தவித ஆக்கபூர்வமான முடிவுகளும் எட்டப்படாது கூட்டம் முடிவுற்றுள்ளமை மிகுந்த ஏமாற்றத்தைத் தருகின்றது. மக்கள் மீளகுடியமர்வது தொடர்பாக மேலும் ஓர் உபகுழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கை மற்றும் ஒஸ்லோ பேச்சுக்களின் பின்னர்தான் அடுத்த கூட்டம் குறித்துச் சிந்திக்கலாம் - என்றார். (ம)

விநியோகஸ்தர்கள் தேவை
நேஸலீக் பிறைடெக்ஸ்
மிகப் பிரபல்யமான இவ்வர்க்க பொருட்களை
விநியோகிப்பதற்கு யாழ். மாவட்ட
விநியோகஸ்தர்கள் தேவை.
வங்கி உத்தரவாதம் தரக் கூடியவர்கள் கீழ் காணும்
முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்
த.பெ. இல. 1358
கொழும்பு - 01.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வன்னித்தம்பி இலட்சுமிப்பிள்ளை

மல்லாகம், பங்களா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வன்னித்தம்பி இலட்சுமிப்பிள்ளை நேற்று (18.11.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித்தம்பியின் அன்பு மனைவியும் நடேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (சுவிஸ்), நந்தீஸ்வரன் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் அபிராமி, றாயினி, காந்தரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் துவாரகா, துசிபா, துளசி, வாரணன், மதுரா, திவ்வியா, கஜெனனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராமசாமி, பொன்னம்மா, அன்னம்மா, இராசம்மா, சின்னம்மா, ஆத்தைப்பிள்ளை, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2002) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.நந்தீஸ்வரன் (மகன்)

*பங்களா வீதி, மல்லாகம்.*

(10762)

### சின்னத்தம்பி இரத்தினம்

கல்வியங்காடு, கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினம் நேற்று (18.11.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
இ.தங்கேஸ்வரன் (மகன்)

*கலைமகள் வீதி, கல்வியங்காடு.*

(10761)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org